Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 317 பிலவ வருடம், ஆவணி மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை (01.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 22, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## தங்கத்தின் விலையில் சரிவு

02



## அரசின் தீர்மானம் ஆசிரியர் தொழிற்சங்கத்தால் நிராகரிப்பு!

02 போராட்டம் தொடருமென்கிறார் ஸ்டாலின்




## நக்கல் நமசிவாயம்

பார்க்குற ஆக்கள் எல்லாம் கொரோனாவுக்கு மருந்து சொல்லுறாங்கள்...எல்லாரும் தாக்குத்தர் ஆகிப்போட்டின பாருங்கோ...



## நாடு முழுவதும் அவசரகால நிலை

### வெளியானது விசேட வர்த்தமானி



•நா.தினுஷா

அத்தியாவசிய சேவைகளை தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் நாடு முழுவதும் அவசரகால சட்டத்தின் சில பிரிவுகளை அமுல்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்பின்பேரில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் மக்களுக்கான சேவைகளை தங்குதடையின்றி வழங்கவும், இயல்பு நிலையை முன்னெடுக்கவும், சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவோர் அல்லது மக்களின் இயல்பு வாழ்க்கையினை... 02

# அரசுக்கு நிதி நெருக்கடி; வருமானத்தில் வீழ்ச்சி!

- நிதியமைச்சர் பெசில் அமைச்சரவையில் சுட்டிக்காட்டு
- செலவுகளை குறைக்கும் வியூகத்தையும் முன்வைப்பு

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றினால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியினால் அரசின் செலவுகளை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா தொற்றினால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் வருமானம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, இந்த ஆண்டின் தொடர்ச்சியான செலவு 2 இலட்சத்து 69 ஆயிரத்து 400 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது, தடுப்பூசிகள்,... 02

## அமைச்சரவை தீர்மானங்கள்

09

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு 780 மில்லியன் டொலர்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு 780 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் ஊடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை மேலும் பலப்படுத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து, பணமாக மாற்றக்கூடிய விசேட மீள்




செலுத்துதல் உரிமைகளின்படி குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் நாட்டுக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதுகுறித்து தமது ட்விட்டர் தளத்தில் கருத்து தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இந்த நிதி கிடைப்பதன்மூலம், நாட்டின் அந்நிய செலாவணி சந்தையின் பணப்புழக்கமும், ஸ்திரத்தன்மையும் பரிமாற்ற விகிதத்தின் மூலம் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## பொருளாதார மத்திய நிலையங்களை இன்றும் நாளையும் திறக்க தீர்மானம்

நாட்டில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் மேலும் இரு தினங்களுக்கு திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


அதற்கமைய, அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் இன்றும் நாளையும் திறக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது, மொத்த விற்பனை நடவடிக்கைகளுக்காக மாத்திரம் விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாக்கப்பட்ட காலப்பகுதியில் முன்னதாக 4 நாட்களுக்கு பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## அத்தியாவசிய உணவு விநியோகத்துக்கான அவசரகால விதிமுறைகள் பிரகடனம்

### அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் நிவுன்ஹெல்ல நியமனம்



பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் ஏற் பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன், சம்பந்தப்பட்ட... 02

## கைதடி முதியோர் இல்லத்தில் 53 பேருக்கு கொரோனா!




யாழ்ப்பாணம் கைதடி முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் முதியவர்கள் 41 பேர் உட்பட 53 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று (31) மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே 53 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அங்கு முதியவர்கள் 49 பேர் பராமரிக்கப்படுவதாகவும் அவர்கள் அனைவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 41 முதியவர்களுக்கும் பணியாற்றும் ஊழியர்கள் 12 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பொது மக்களின் ஒத்துழைப்பின்றி கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது

### அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரண

•யோ.தர்மராஜ்

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இல்லையேல் தங்களுடைய உயிர்கள் குறித்தும் பாரிய பாதிப்பு ஏற்படும் என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (31) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முடக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட ஒரு தரப்பினரே பொறுப்பற்ற வகையில் வெளியில் நடமாடுகின்றனர். பொது மக்களின் ஒத்துழைப்பின்றி எங்களால் கொரோனா தொற்றைக்... 02

## ஆப்கானை துறந்த அமெரிக்க துருப்புகள்; தலிபான்களின் ஆளுகைக்குள் காபூல்

07

## கோவிட் தொற்றினால் 6 வாரங்களுள் குழந்தைகளிடையே புதிய நோய்

- சிகிச்சைபெற்றுவரும் 45 பேரில் நால்வர் ஐ.சி.யுவில்
- ஒரு குழந்தை உயிரிழப்பு

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றுக்குள்ளாகி 2 – 6 வாரங்களில் குழந்தைகளிடையே ஏற்படும் Multisystem inflammatory syndrome in children (MIS – C) எனும் நோயுடன் கொரோனா தொற்றுக்குள்ளான 45 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன், நால்வர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஒரு குழந்தை உயிரிழந்துள்ளதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் நளின் கிதுல்வத்த தெரிவித்தார். கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு குழந்தைகளிடையே ஏற்படும் புதிய நோய் தாக்கம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02

## ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாகவே தீர்க்கமுடியும்

### கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன

•யோ.தர்மராஜ்

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாகவே தீர்க்கமுடியும். அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைகளை கட்டம் கட்டமாக தீர்ப்பதற்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (31) இடம்பெற்ற அமைச்சரவை... 02

# புத்தசாசன அமைச்சின் பௌத்த விவகாரங்களுக்கான மேலதிக ஆணையாளராக சரத்சந்திர நியமனம்



(டி.சந்ரு)

நுவரெலியா மாவட்ட தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களுக்கான அரச பணிகளுக்கு உதவிகளை செய்து மாவட்ட மக்களின் மனதில் இடம்பிடித்திருந்த நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் பி.ஏ.சரத் சந்திர, புத்தசாசன அமைச்சின் பௌத்த விவகாரங்களுக்கான மேலதிக ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2015 ஆம் ஆண்டு முதல் நுவரெலியா மாவட்ட செயலக மேலதிக செயலாளராகவும், இம்மாவட்டத்தின் மேலதிக மாவட்ட இடம் பதிவாளராகவும் சிறப்பான சேவையை செய்துவந்திருந்தார். நுவரெலியா மாவட்டத்தில் இவரின் சேவைக் காலப்பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் சேவைகள் செய்திருந்தார்.

அதேநேரத்தில் நுவரெலியா பெருந்தோட்ட மக்களுக்கு அரசாங்க உதவிகள், நிவாரணங்கள், காணி பிரச்சினைகள் உள்ளிட்ட அரச சேவைகளை இம் மக்கள் பெற்றுக்கொள்ள சக்தியாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் கொரோனா தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் செயற்பாடுகளை தீவிரப்படுத்த தீர்மானம்

## கொவிட் செயலணிக் கூட்டத்தில் கபில நுவன் அத்துக்கோரள

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணிக்கூட்டம் நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோரள தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய நிலையில் கொவிட் வைரஸைக் கட்டுப்படுத்த மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும். இன்று மாவட்டத்தின் கிராமங்களுக்கும் வைரஸ் பரவியுள்ளது. கிராமங்களில் நடைபெறுகின்ற சில வைபவங்களாலேயே வைரஸ் பரவியுள்ளது. எனவே மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளை தற்போது மேற்கொள்ளும் செயற்பாடுகளைவிட கூடியளவில் மேற்கொள்ளுமாறு இதன்போது இக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மாவட்டத்தில் உள்ள கிராமியக் குழுக்களை மேலும் வலுப்படுத்தி வைரஸ் பரவாமல் இருக்க ஆவண செய்யவேண்டும். இக்குழுவை





வலுப்படுத்துவதன் மூலம் கிராமங்களில் வைரஸ் பரவாமல் மக்களை பாதுகாக்க முடியும். மக்கள் இக்காலப்பகுதியில் மிக அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படல் வேண்டும். பிரதேச செயலாளர் பிரிவுகளில் உரிய தரப்பினரை ஒன்றிணைத்து கொவிட் வைரஸைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தெரிவித்தார்.

மக்கள் அநாவசியமாக நடமாடுவதை தவிர்த்தல் இன்றியமையாதது. மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதானது ஆபத்தை நோக்கி பயணிக்க ஏதுவாக அமையும். எனவே தற்போதைய அபாயகர நிலையை கருத்திற்கொண்டு ஒவ்வொருவரும் செயற்படுமாறு இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார். இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பி.ஆர்.ஜயரத்ன, பிரதேச செயலாளர்கள், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# வவுணதீவில் கசிப்பு உற்பத்திசெய்யுமிடம் முற்றுகை; 06 பரல் கோடா - 70 லீற்றர் வடிசாராயம் மீட்பு

## இருவர் தப்பியோட்டம் - கட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்திசெய்யும் இடமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள கண்டியனாறு குளத்தை அண்டிய காட்டுப்பகுதியில் மறைமுகமான இடத்தை தெரிவுசெய்து, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவேளை, நேற்று முன்தினம் வவுணதீவு பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில் கோடா அடங்கிய ஆறு பரல்கள், 70 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் சில பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் காட்டுக்குள் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் அண்மைக்காலமாக சட்டவிரோத கசிப்பு எனப்படும் வடிசாராயம் உற்பத்தி அதிகரித்துள்ளது. தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறை காலத்தில் இந்த கசிப்பு உற்பத்தி பல கிராமங்களிலும் வேரூன்றி உள்ளதனை கிராம மக்கள் வாயிலாகவும் பொலிஸார் ஊடாகவும் அறியக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாரசிங்கவின் ஆலோசனையில், வவுணதீவு பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவின் இரகசிய தகவலுக்கமைவாக, நிலையப் பொறுப்பதிகாரி கே.டி. நிசாந்த அப்புகாமியின் வழிகாட்டலில், சி.லோஜிதன் (8626), ஜயசுந்தர (91132), வை.டினேஸ் (8656) ஆகியோர் அடங்கிய பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவினரால் இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கண்டியனாறு குளத்தை அண்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில்



இளைஞர் ஒருவர் உள்ளூர் தயாரிப்பான கட்டுத் துப்பாக்கியுடனும் கசிப்பு 3750 மில்லி லீற்றருடனும் நேற்றுமுன்தினம் விஷேட புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நிலையப் பொறுப்பதிகாரி கே.டி. நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள கண்டியனாறு குளத்தோரங்களிலுள்ள காட்டுப் பகுதியில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் மிக அதிகரித்துள்ளதாகவும், விஷேட அனுமதியுடன் வவுணதீவு பொலிஸார் இந்த சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து வருவதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் வடிசாராயம் எனப்படும் இந்த கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டவுடன் அதன் கழிவுகள், கோடா போன்றவற்றை அருகிலுள்ள குளத்தில் சேர்ப்பதால் குளம் மாசடைவதாகவும், அதிலுள்ள உயிரினங்கள் அழிக்கப்படுவதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி. நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட பரல்கள் உள்ளிட்ட பொருட்களையும், கட்டுத் துப்பாக்கி, கசிப்புடன் கைதுசெய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொரோனாவினால் உயிரிழந்த 85 வீதமானோர் வெவ்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்

## சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவிப்பு

**இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களில் அநேகமானவர்கள், பிற நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் என சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.**

**சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் வைத்தியர் ரஞ்சித் பட்டுவந்துடுவ இதனைத் தெரிவித்தார்.**

**ஓகஸ்ட் 13 ஆம் திகதி வரை நாட்டில் பதிவான கோவிட் -19 உயிரிழப்புகளில் 85%- அதாவது 6,985 பேர் - அடிப்படை நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அவர் தெரிவித்தார். தொற்றுநோயியல் பிரிவு நடத்திய பகுப்பாய்வு மூலம் குறித்த தகவல் கண்டுபிடிக்கப்பட்டது என்றார்.**

**23ஆம் திகதி வரை பதிவான 6,985 உயிரிழப்புகளில், 2,261 பேர் அல்லது 53வீதமானோர், நீரிழிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார். 2,202 பேர் அல்லது 52 வீதமானோர், உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். 1,001 பேர் அல்லது 24வீதமானோர் ஏற்கனவே இருதய சம்பந்தப்பட்ட நோய்களைக் கொண்டிருந்தனர்.**

**800 பேர் அல்லது 18 வீதமானோர் , நாட்பட்ட சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்றார்.**

### நாடு முழுவதும்...

சீர்குலைப்போர் மீது இதனடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியமுடிந்தது. அவசரகால சட்டத்தின் ஒழுங்குகளுக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தினை பெற அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சொல்லப்பட்டது.

### கொவிட் தொற்றினால்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றுக்குள்ளாகி 2 – 6 வாரங்களில் குழந்தைகளிடையே Multisystem inflammatory syndrome in children (MIS – C) எனும் நோய் தொற்றுக்குள்ளான 45 சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். தற்போது நோயினால் பாதிக்கப்பட்ட 4 குழந்தைகள் லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த நோய் இலங்கை முழுவதும் பரவி வருகிறது.

புதிதாக குழந்தை பிறந்தவுடன் இந்த நோய் ஏற்படுவதை தற்போது அவதானிக்க முடிகின்றது. கொரோனா தொற்று ஏற்பட்டவுடன், குழந்தையின் உடலிலுள்ள மற்ற பகுதிகளுக்கும் பாதிக்கும். அதன்படி, இதயம், சிறுநீரகம், நுரையீரல் மற்றும் கல்லீரலும் பாதிப்புக்குள்ளாகும். குறிப்பாக, இது இதயத்தைப் பாதிக்கும் பட்சத்தில் இரத்த அழுத்தத்தைக் குறைத்து, மரணத்தைக் கூட ஏற்படுத்தும்.

இதற்கு முறையான சிகிச்சை வழங்கப்படும் பட்சத்தில் இதிலிருந்து முழுமையாக குணத்தை பெறமுடியும். இந்த நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒரு குழந்தை உயிரிழந்துள்ளது.

ஆகவே, குழந்தைக்கு காய்ச்சல், கடுமையான வயிற்றுவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, சிவந்த கண்கள் அல்லது அரிக்கும் தோலழர்ச்சி போன்ற அறிகுறிகள் இருந்தால், உடனடியாக வைத்தியரை அணுகவேண்டும்.

தாய்க்கு கொரோனா வந்தால், தாயின் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி குழந்தைக்குச் செல்லும். அதனால் தான் குழந்தையின் உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. தீவிர சிகிச்சைப் பிரிவும் இந்த நோயாளிகளால் நிரம்பியுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட மற்றொரு குழந்தையை எங்களால் பொறுப்பேற்க முடியாதுள்ளது - என்றார்.

### பொது மக்களின்...

கட்டுப்படுத்த முடியாது. இதனாலேயே, அத்தியாவசிய தேவைகளின்றி தேவையற்ற விதத்தில் வீட்டிலிருந்து வெளியேற வேண்டாம் என சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இல்லையேல் தங்களுடைய உயிர்கள் குறித்தும் பாரிய பாதிப்பு ஏற்படும். இதனை உணர்ந்து பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

### அரசுக்கு நிதி நெருக்கடி:...

சுகாதார சேவைகளின் செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட செயல்பாடுகளால் செலவுகள் மேலும் அதிகரிக்கும் என்று அமைச்சரவையில் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அரசு நிதி ஒதுக்கீடு செய்த போதிலும் இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ள திட்டங்கள், கொள்வனவு, கட்டடங்கள் நிர்மாணித்தல், கட்டடங்களை சீரமைத்தல் போன்றவற்றை நிறுத்தி வைக்குமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு நிதி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. மேலும், இதுவரை நியமனக் கடிதங்கள் வழங்கப்படாத வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை நிறுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

நலன்புரி நடவடிக்கைகளுக்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் பட்டியலை மறு பரிசீலனை செய்து குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மட்டுமே மானியங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உரிய துறையின் தலைவர்களின் அனுமதியுடன் வழங்கப்படும் சம்பளமில்லாத கொடுப்பனவுகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பன்வுகள் தொடர்பாக மறுபரிசீலனை செய்து சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகளை சேவைகு வருகை தரும் திகதியில் மட்டுமே செலுத்த முடியுமான என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நிதி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சேமிக்கப்படும் நிதியின் அளவு குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சினால் அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்றைய அமைச்சரவையில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண,

நாட்டிலுள்ள நிதி நெருக்கடியினால் அமைச்சுகளில் கட்டுப்படுத்தக் கூடிய செலவுகள் இருப்பின் அதனைக் கட்டுப்படுத்தி, கடுமையான நிதி கட்டுப்பாட்டை முன்னெடுத்துச் செல்லுமாறு நிதி அமைச்சரினால் அமைச்சரவையில் அறிவிக்கப்பட்டது. நிதி நெருடிக்கடியினால் கடுமையான நிதி கட்டுப்பாட்டை முன்னெடுக்க வேண்டியுள்ளது. - என்றார்.

### தங்கத்தின் விலையில்...

உலக சந்தையில் தங்கத்தின் விலை மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 0.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதனடிப்படையில், உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1,813 அமெரிக்க டொலராக விற்பனை செய்யப்படுகின்றது. அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்வடைந் துள்ளமை தங்கத்தின் விலை குறைவடைய காரணம் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### அத்தியாவசிய உணவு...

அவசரகால விதிமுறைகள், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை மொத்தமாகப் பதுக்குதல், அதிகவிலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக, அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து மக்களுக்கு நியாயமான விலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கும், அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கடன், கடன் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அறவிடப்படக்கூடிய வகையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்கு தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆசிரியர், அதிபர்களின்...

முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் சேவையை ஒன்றிணைந்த சேவையாக மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நாடு பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பை சந்தித்துள்ள நிலையிலும், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கான யோசனை முன்வைக்கும் வரையில் குறிப்பாக, நவம்பர் மாதம் வரை ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது தற்போது ஏற்பட்டுள்ள சில சில பிரச்சினைகளுக்கான தீர்வாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடுகளை எதிர்வரும் நான்கு வருடங்கள் முடிவதற்குள் கட்டம் கட்டமாக தீர்ப்பதற்கு உரிய தீர்மானத்தை அறிவிக்க முடியும் என அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது. இதற்கு தேவையான ஒத்துழைப்பை நிதி அமைச்சின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக முன்னாள் கல்வி அமைச்சர்களான ஜீ.எல் பீரிஸ் மற்றும் டளஸ் அழகபெரும ஆகியோரால் அமைச்சரவை பத்திரங்களும் முன்வைக்கப்பட்டன. அதன்படி, சுபோதினிய குழுவின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, சுபோதினிய குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே அமைச்சரவை உப குழு பரிந்துரைகளையே முன்வைத்துள்ளது.

மேலும், சம்பள முரண்பாட்டை நிதி அடிப்படையில் வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் 43 இலட்சத்துக்கு மேலான மாணவர்களுக்கு கல்வி இல்லாது போயுள்ளது. எனினும், இணைய வசதிகளைக் கொண்டு மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

### அரசின் தீர்மானத்தை...

நா.தினுஷா

நடப்பாண்டின் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் கடமைகளில் ஈடுபடும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 5000 ரூபா விசேட கொடுப்பனவு வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறான தீர்மானங்கள் நடைமுறைச் சாத்தியமற்றவையாகும். எங்களின் கோரிக்கைகளுக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் வரை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று ‘தமிழன்’ நாளிதழுக்கு தெரிவித்தார்.

அதிபர்-ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபசெயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய, அமைச்சரவை உபசெயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கொள்கை ரீதியாக அங்கீகரிப்பதற்கும், ஆசிரியர் சேவை, ஆசிரியர் ஆலோகர் சேவை மற்றும் அதிபர் சேவைகள் போன்றவற்றை வரைவிட்ட சேவையாக 2021 நவம்பர் மாதம் 20 திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கும், அமைச்சரவை உப செயற்குழு மூலம் அதிபர்-ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக பரிந்துரைக்கப்பட்ட சம்பளத் திருத்தங்கள், 2022 வரவ செலவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, 2021 செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் தமது கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு 5,000 ரூபா விசேட கொடுப்பனவு செலுத்துவதற்கு உப செயற்குழுவின் இதர யோசனைகள் மாகாண சபைகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து கல்வி அமைச்சின் மூலம் 06 மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசின் இந்த தீர்மானங்கள் தொடர்பில் தொழிற்சங்க தரப்பின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கும்போதே ஜோசப் ஸ்டாலின் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுபோதினி குழு அறிக்கையினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை. அவ்வாறு இருக்கையில் அமைச்சரவை உபகுழு மூலம் கொண்டுவந்துள்ள இந்த யோசனைகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சரவை உபகுழுவினால் பரிந்துரைக்கப்படும் யோசனைகளை

சுபோதினி குழு அறிக்கையின் ஒருபகுதியாக செயற்படுத்தவேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. இதுவே எங்களின் கோரிக்கையுமாகும். ஆனால், அதனை ஏற்றுக்கொள்ளாமல் 5000 ரூபா கொடுப்பனவை அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் கட்டம் கட்டமாக வழங்குவதற்கான நடைமுறைகளை பின்பற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் காரணமாகவே அரசாங்கத்தின் அந்த தீர்மானத்துக்கு நாங்கள் மறுப்பு தெரிவிக்கிறோம்.

அரசாங்கத்தின் தீர்மானத்தில் திருப்தியடைய கூடிய தன்மை இல்லாததால் எங்களின் போராட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெறும். ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்துக்கு முழுமையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பது எங்களின் எதிர்பார்ப்பு.

வேலைசெய்பவர்களுக்கு மாத்திரமே இந்த 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது ஆசிரியர் பணியை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில், இவ்வாறான தீர்மானங்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றவையாகும். அதேபோன்று எங்களின் இந்த பிரச்சினைகள் தொடர்பில் பொது இணக்கத்துக்கான பேச்சுவார்த்தையொன்றுக்கு செல்லவேண்டும்.

ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் என்ற அடிப்படையிலேயே எங்களின் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்காலத்திலும் 30 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

# இன்றைய ராசி பலன்

நாள்: 01.09.2021 புதன்கிழமை - ஆவணி 16

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**சுப நேரங்கள்**
காலை 6.07 - 7.35
மாலை 3.12 - 4.43

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.12 - 1.44

**குளிகை காலம்**
காலை 10.41-பி.ப 12.12

**எமகண்ட காலம்**
காலை 7.38 - 9.09

**துர் முகூர்த்தம்**
காலை 11.46 - பி.ப 12.35

**நட்சத்திரம்: மிருகசீரிடம்**
பி.ப. 12.34 வரை

**திருவாதிரை**
பி.ப 12.34 -02.09.2021
பிற்பகல் 2.57 வரை

**யோகம்: சித்தி**
காலை 9.39- 02.09.2021
காலை 10.09 வரை

**திதி: அமர பட்ச தசமி**
01.09.2021 அ.கா 4.23-
02.09.2021 காலை 6.22

**முற்கரணம்: வணிஜம்**
அ.கா 4.23 - பி.ப 5.26

**பிற்கரணம்: பத்திரை**
பி.ப 5.26 - 02.09.2021
காலை 6.22 வரை

**மேடம்**
மண வாழ்க்கை பிரச்சினைகள் குறைய துவங்கும். பணியிடங்களில் அறிவின் முயற்சியால் உண்டாகும் திறமைக்கு, பணியிட திறமைமிக்க வல்லுனர்களால் பதவி உயர்வுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**ரிஷபம்**
உடல்நலத்தில் பிரச்சினை தோன்றலாம். செலவுகளில் கவனம் தேவை. முகத்திற்கு நேராக பாராட்டி, பிறகு புறம் பேசுபவர்களிடம் கவனம் தேவைப்படலாம்.

**மிதுனம்**
காதலுக்கு குடும்ப அங்கீகாரம் பெற முயற்சி உண்டாகலாம். வெளிநாட்டு பயணம் தொடர்பான செய்திகள் கிடைக்கக்கூடும். பணியில் புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**கடகம்**
உடல்நலத்தில் பலவீனம் ஏற்படலாம். வேலைத்தளங்களில் எதிர் நிலை, சில களங்கம் உண்டாகலாம். இறையருளால் பிரச்சினைகளை குறைத்து கொள்ளலாம்.

**சிம்மம்**
சில பிரச்சினைகளை நீக்கும் உங்கள் முயற்சி நன்மை தரும். வியாபார மேன்மைக்கு ஊடக விளம்பரங்கள் உதவும். மாணவர்களின் கல்வியில் சிறப்பு உண்டாகும்.

**கன்னி**
வியாபார பங்குதாரர்கள் விடயங்களில் புதிய முடிவு உண்டாகலாம். சில பணிகளின் நிறைவேற்றம் மன மகிழ்ச்சியும், நல்ல பலன்கள் பெறுதலும் ஏற்படலாம்.

**துலாம்**
பெண்களுக்கு உடல் நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். அரசாங்க ஒப்பந்த வேலைகள் தாமதமடையலாம். இறை தியானம் நன்மை தரும்.

**விருச்சிகம்**
பிறரின் விடயங்களில் தலையீடு வேண்டாம். பணிகளில் கவனம் செலுத்தி நன்மை பெறலாம். இறையருளால் பிரச்சினைகளை குறைத்து கொள்ளலாம்
சந்திராஷ்டமம்:
விசாகம் நட்சத்திரம்
பாதம் 4க்கு
அதிகாலை 5.54 வரை
அனுஷம்
நட்சத்திரத்திற்கு
அ.கா. 5.54 - 02.09.2021 காலை 8.25 வரை

**தனுசு**
மின் சாதனங்கள் சம்பந்தப்பட்ட வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பண வருவாயால் கவலைகள் உருவாகலாம்.

**மகரம்**
பிள்ளைகளின் வருங்காலம், பண நிலைமை கவலை தரலாம். ஆன்மீக வழிபாடு நன்மை தரும். திறமைகளும் மேம்படும்.

**கும்பம்**
பணிகளிலும் இல்லத்திலும் இருக்கும் சிந்தனை, தேவையற்ற பிரச்சினைகளில் தலையீடுகளை குறைக்கும். உடல் ஓய்வும் நன்மை தரும். சுப்ரமணியரை வணங்கி நன்மை பெறலாம்.

**மீனம்**
காணி/வீடு சார்ந்த பிரச்சினைகள் நீங்கும். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும். இறையருளால் நன்மை கிடைக்கலாம்.

# காணாமல் போனமை குறித்து ஆராய வேண்டிய அவசியமில்லை

## நீதி அமைச்சர் அலி சப்ரி வெளிப்படையாக அறிவிப்பு



ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் என்ன காரணத்திற்காக காணாமல்போனார் என்பதை விசாரிக்கத் தேவை இல்லை. அது விடயத்தில் குற்றம் ஏதும் நடந்துள்ளதா என்பதையும் பார்க்காதீர்கள். அதை மறந்து விடுங்கள். அவர் ஏன் காணாமல் போனார் என்று தேடாதீர்கள். அவர் எந்தப் பக்கம் என்று பார்க்காதீர்கள். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, காணாமல் போனவர் எங்கள் இலங்கை நாட்டவர் என்ற அடிப்படையில் அதனால் ஏற்பட்ட வலியை உணர்ந்துகொண்டு, உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்பதையே ஜனாதிபதி அமைச்சரவையிலும் வெளியிலும் எங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி வருகிறார்.

- இவ்வாறு பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார் நீதி அமைச்சர் அலி சப்ரி.

நேற்றுமுன்தினம் மெய்நிகர் முறைமையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் புதிய ஆணையாளராக ஓய்வு பெற்ற நீதியரசர் உபாலி அபயரத்ன பதவியேற்ற பின்பு இந்த முதலாவது பகிரங்க கலந்துரையாடல் இரவு 7 மணிமுதல் 8 மணிவரை இடம்பெற்றது.

இதில் நீதி அமைச்சர் அலி சப்ரி , நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி வெலேபொட, சுரேன் ராகவன் ஆகியோருடன் ஓர் பௌத்த பிக்குவும் கலந்து கொண்டார். இதில் கலந்துகொண்டே அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காணாமல் போனோர் தொடர்பான விடயத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாக இருக்கிறார். நீதி அமைச்சர் என்ற ரீதியில் நானும் இந்த விடயத்தில் எனது பூரண பங்களிப்பை வழங்கி வருகிறேன். முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது காணாமல்போனோர் அலுவலம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றை நீதி அமைச்சர் என்ற வகையில் நானும் வெளிவிவகார அமைச்சும், கலாநிதி சுரேன் ராகவன் எம்.பியும், காமினி வெலேபொட எம்.பியும் தொடர்சியாகக் கண்காணித்து, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகிறோம்.

காணாமல் போனவர் என்ன காரணத்திற்காகக் காணாமல் போனார் என விசாரிக்கத் தேவை இல்லை என ஜனாதிபதி கூறியுள்ளார்.

காணாமல் போனவர் ஓர் இலங்கை பிரஜை என்பதனை ஏற்று அதனால் அவரின் உறவுகளுக்கு ஏற்பட்டுள்ள வலியைப் புரிந்து கொண்டு, அதிலிருந்து பாடம் படித்து, அது மீள நிகழாமையை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அமைச்சரவை கூட்டத்தில் எங்களுக்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்திய விடயம் இவ்விவகாரத்தில் குற்றம் ஒன்று நடந்திருந்தால் அதை மறந்து விடுவோம். யாராவது ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் எந்த இனம், என்ன மொழி, எந்தப் பக்கம் என ஆராயத் தேவையில்லை. இலங்கை பிரஜை எனப் பார்ப்போம். அந்த குடும்பங்களின் வலியைப் புரிந்து கொண்டு, நிலையை கருத்தில் கொண்டு, இழப்பீடு கொடுப்போம்.

யுத்தம் முடிவு பெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னும் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பது, எமது நாடு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் முன்செல்லமுடியாமல் இருப்பதற்கு காரணமாக உள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என எல்லாத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் எத்தகைய சூழ்நிலையில், எப்படிக் காணாமல் போனார் என்பதைப் பார்ப்பதை விடுத்து, அவர் காணாமல் போனார் என்பதை மட்டும் அடையாளம் கண்டு இழப்பீட்டை செலுத்துவோம். இதேநேரம் காணாமல் போனோருக்காக இழப்பீடு வழங்கினால் அரசு குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் அர்த்தம் இல்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு மட்டும் வழங்காது, பொது மன்னிப்பு ஒன்றை கேட்பதாலும் வழங்குவதாலுமே இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரமுடியும்.

சர்வதேச ரீதியில் அவ்வாறே இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையை இனியும் தொடர முடியாது. முடிவுரை எழுத வேண்டும். - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உரையாற்றுகையில் -

1000 நாட்களுக்குள் காணாமல் போனோர் தொடர்பான விடயத்தை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே எனது விருப்பமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நீதியும் இனி அவ்வாறானதொரு நிலை திரும்பவும் ஏற்படாதிருக்க செய்யக்கூடிய அனைத்து வழிகளையும் நோக்கி நாம் செயற்பட்டு வருகிறோம். - என்றார்.

# வெளிநாட்டு அமைச்சர் - நோர்வே தூதுவர் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்



இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரெய்ன் ஜொரான்லி எஸ்கெடல் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான பரஸ்பரம் நன்மை பயக்கும் கூட்டாண்மையைப் பாராட்டிய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நாட்டின் ஆர்வத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலான முதலீடு, நோர்வே தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் மீன்வளத் துறையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றை வலியுறுத்தி இருதரப்பு ஆர்வமுள்ள பகுதிகளை தூதுவர் எஸ்கெடல் விரிவாக விவரித்தார். புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் நோர்வேயுடன் முதலீட்டுக் கூட்டாண்மைக்கான சாத்தியம் தொடர்பிலும் அவர் விளக்கமளித்தார்.

இலங்கை - நோர்வே கூட்டாண்மையின் மைல்கல்லாக மீன்வளத்துறையில் வலுவான ஒத்துழைப்பை தூதுவர் எடுத்துரைத்தார். கடல் வளங்களில் ஆராய்ச்சி, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் கடல் மூலோபாயத்தின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

ஆற்றல் சார்ந்த பரப்பில் நோர்வேயுடனான தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் அமைச்சர் பீரிஸ் வரவேற்றார்.

நீர்வள ஆராய்ச்சி மற்றும் நீலப் பொருளாதாரம் மற்றும் இலங்கையின் பங்குச் சந்தையில் மதிப்புமிக்க நோர்வே ஓய்வூதிய நிதியத்தின் முதலீடு ஆகியவற்றில் நோர்வேயின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுற்றுலா, கல்வித் தொழில்நுட்பம், இரத்தினம் மற்றும் ஆபரணத் துறையிலான பெறுமதி சேர்ப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் பிராந்திய மற்றும் பலதரப்பு ஈடுபாடு குறித்து வெளிநாட்டு அமைச்சர் தூதுவருக்கு விளக்கினார். இந்த சந்திப்பில் போது வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வீடுகளில் தீபம் ஏற்றி கவனயீர்ப்பு

*(மன்னார் நகர் நிருபர்)*

யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் முப்படைகளாலும் கடத்தப்பட்ட, கையளிக்கப்பட்ட உறவுகளின் நீதியை வலியுறுத்தி நேற்று முன்தினம் இரவு மன்னார் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளோடு இணைந்து மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் தீபம் ஏற்றி கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

முடக்க நிலை காரணமாக வீடுகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு விரைவில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமென கோரியும் வீடுகளில் தீபமேற்றி காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர் கவனயீர்ப்பு நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

அதேநேரம், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு யுத்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் இலங்கை அரசாங்கத்தினால் கடத்தப்பட்ட மற்றும் சரணடைந்த தங்கள் உறவுகளுக்கு நியாயத்தை பெற்றுதர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.



*தமது சேவை உதவியாளர் ஒருவரை கொழும்பு கண் வைத்தியசாலையிலிருந்து ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று தேசிய கண் வைத்தியசாலை முன்பாக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...*

(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)

# ஆட்டுக் கொட்டகையின் சுவர் இடிந்து விழுந்ததில் ஒன்றரை வயது குழந்தை பலி

## - வவுனியாவில் பரிதாபம்





*(வவுனியா நிருபர்)*

வவுனியாவில் விளையாடிக் கொண்டிருந்த ஒன்றரை வயது குழந்தை ஆட்டுக் கொட்டகையொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பைமடுப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் குறித்த குழந்தையின் தந்தையால், தமது ஆடுகளை கொட்டகையில் கட்டிக் கொண்டிருந்த போது, சீமெந்து கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்த ஆட்டுக் கொட்டகையின் சுவருக்கருகில் ஒன்றரை வயது குழந்தை விளையாடிக் கொண்டிருந்துள்ளது.

இதன்போது ஆடுகள் கொட்டகையின் சுவர்மீது மோதியதால் சுவர் இடிந்து ஒன்றரை வயது குழந்தை மீது விழுந்துள்ளது. இதனால் குறித்த குழந்தை மரணமடைந்துள்ளது.

குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னேரே மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் வவுனியா, பம்பைமடுவைச் சேர்ந்த சுஜந்தன் கிருஷன் என்றழைக்கப்படும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,36,081 | 55,098 | 3,71,992 | 4,562 | 8,991 |

# பிரபலமான சுற்றுலாத் தலமாக தலதா மாளிகை அறிவிப்பு

*(கண்டி நிருபர்)*

வெளிநாட்டு இணையத்தளமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டி ஸ்ரீதலதா மாளிகை மிகப் பிரபலமான சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ட்ரைப்பெட்விசர்' என்ற மேற்படி இணையம் ஒரு மில்லியன் வாசகர்களிடம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி இணையம் சுற்றுலா இடங்கள் குறித்தும் அவற்றின் பிரபலம் குறித்தும் தகவல்கள் வெளியிடும் ஒரு பிரபல இணையமாகும்.

# பால்மா களஞ்சியத்தில் திடீர் சுற்றிவளைப்பு

*(மாளிகைக்காடு நிருபர்)*

நாட்டில் பால்மா தட்டுப்பாடு நிலவிவரும் சூழ்நிலையில் நுகர்வோர் அதிகாரசபையின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்களினால் பால்மா விநியோகம் செய்யும் நிந்தவூர் பிரதேச களஞ்சியசாலை ஒன்று திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிண்ட பண்டார நவரத்ன தலைமையிலான குழுவினர் அந்த களஞ்சியசாலையில் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அங்கு எவ்விதமான பதுக்கல் நடவடிக்கையும் இடம்பெற்றிருக்கவில்லை என நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தமிழன் பத்திரிகைக்கு உறுதிப்படுத்தினார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, செப்டெம்பர் 01ஆம் திகதி, புதன்கிழமை

# உலகை தக்கவைப்பது மிகவும் அவசியமானது

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் ஏற்றுமதி வருமானத்தில் போதியளவு அதிகரிப்பு இல்லாமையாலும் இறுக்கமான சூழல் உருவாகியுள்ளது.

இலங்கை, இவ்வாறானதொரு நிலைமைக்கு தள்ளப்படும் என பல்வேறு நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தன.

வளர்ச்சியடைந்து வரும் நாடான இலங்கை, மிகப்பெரிய கடன்சுமையை கொண்டிருக்கிறது. இதிலிருந்து மீள்வதென்பது மிகச் சிரமமானதாகும். இதன் முழுத் தாக்கத்தையும் பொதுமக்கள் அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், இந்தச் சவாலை தனித்துநின்று வெற்றிக்கொள்ள முடியாது. உலக நாடுகளின் உதவியினூடாகவே ஓரளவுக்கேனும் சூழ்நிலையை சமாளித்துக்கொள்ள முடியும். இலங்கையைப் பொறுத்த வரையில் வெளிநாடுகளுடன் சுமுகமான உறவைப் பேணும் பட்சத்தி லேயே அதற்கான சாதகத்தன்மை அதிகமாகும்.

ஆனால், அவ்வாறான சுமுகமான உறவு இருக்கிறதா என்றால் அது கேள்விக்குறியே.

நாடு பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்திருக்கிறது. ஆதலால், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படும் தீர்மானம் எதுவும் உண்டா, இந்த விடயம் குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டதா? என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரணவிடம் கேள்வி எழுப்பினார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

“அமைச்சரவையில் இது குறித்து பேசப்படவில்லை. இந்த விடயம் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை” இவ்வாறு மிகச் சுருக்கமாக பதிலளித்தார் அமைச்சர் பத்திரண.

அவ்வாறாயின் அரசாங்கத்திடம் நீண்டகால திட்டமிடல்கள் இல்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெளியிட்ட கருத்துகள் நமது நாடு குறித்த சர்வதேசத்தின் நற்பெயரை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இலங்கையினால் ஏனைய நாடுகளுக்கோ அல்லது வேறு எவருக்குமோ எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எனினும் ஒவ்வொரு வருடமும் ஜெனீவா நகரில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். எனவே, பேசவேண்டிய பல பிரச்சினைகள் உள்ள நிலையிலும் எமது நாட்டை தெரிவு செய்து ஏன் இவ்வாறு பேசுகின்றார்கள் என்கின்ற கேள்வியை ஜெனீவா கூட்டத் தொடரில் கேட்க நினைப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

“செப்டெம்பர் 12 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைப் பேரவை ஜெனீவா நகரில் கூடுகின்றது. செப்டெம்பர் 21 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் கூடுகின்றது. இவ்விரண்டு மாநாடுகளிலும் நாம் எமது நாட்டிற்கான அனைத்து பயனையும் பெற எதிர்பார்க்கின்றோம்.

எமது நிலைப்பாடு பற்றி விலாவாரியாக நாம் தெளிவுபடுத்தியிருக்கின் றோம். அந்த நாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவர்களான மொஹான் பீரிஸ் மற்றும் சி.ஏ. சந்திரபிரேம ஆகியோர் மூலமாக இந்தத் தெளிவுபடுத்தலை செய்துள்ளோம். அத்தோடு, கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை தனித்தனியாக சந்தித்து ஜெனீவா கூட்டத்தொடருக்குத் தொடர்புடைய விடயங்களையும், தெளிவுபடுத்தலையும் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் நான் செய்துள்ளேன்.

இலங்கை என்பது அனைத்து நாடுகளுடனும் சிறந்த தொடர்பை வைத்துக்கொண்டு அமைதியாக இருக்கின்ற நாடாகும். எமது நாட்டினால் ஏனைய நாடுகளுக்கோ, வேறு எவருக்குமோ எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எனினும் ஒவ்வொரு வருடமாக ஜெனீவா நகரில் இலங்கை பற்றி விமர்சித்து, பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றமையிட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

இதற்கு உண்மையான காரணம் என்ன என்கின்ற பிரச்சினை எழுகின்றது. இதில் நீதி உள்ளதா, உண்மையில் இது மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்டதா அல்லது அதற்கு அப்பாலான அரசியல் நிகழ்ச்சி நிரலா? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது” என ஜீ.எல். மேலும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டா வெளிநாட்ட லுவல்கள் அமைச்சர் இவ்வாறு பேசுகிறார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளைப் பகைத்துக்கொண்டு சீனா கைகொடுக்கும் என்ற அசட்டு நம்பிக்கையிலா அரசாங்கம் பயணிக்கிறது?

எதேச்சதிகாரத்தில் தான்தோன்றித்தனமான தீர்மானங்களால் ஏற்பட்ட விளைவுகளை நாம் கடந்த காலத்தில் சந்தித்திருக்கிறோம். இராணுவத்தை வழிநடத்துவதற்கும் நாட்டை வழிநடத்துவதற்கும் இடையிலான வேறுபாட்டை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

சர்வதேசத்தின்பால் ஒரு நாட்டுக்கு உள்ள நன்மதிப்பின் அடிப்படையிலேயே வளர்ச்சி தங்கியிருக்கிறது. திறந்த பொருளாதார கொள்கையுடைய நாடு என்ற வகையில் அந்நிய நாடுகளுடனான தொடர்பு அத்தியாவசியமானதாகும். அதனை தக்கவைத்துக்கொள்வது எப்படியென சிந்திக்க வேண்டுமேயொழிய, வீண் வார்த்தைகளால் இல்லாமல்செய்ய முற்படக் கூடாது.

# ஆப்கானின் வீழ்ச்சியும் தலிபான்களின் எழுச்சியும்





அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஆப்கானிஸ்தானின் எழுச்சிக்காக செய்தவை அனைத்தையும் தலிபான்கள் இரண்டு வாரங்களில் தலைகீழாக மாற்றி விட்டனர். ஆப்கானிஸ்தானை தலிபான்கள் மீண்டும் கைப்பற்றியதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆய்வாளர்கள் ஆளுக்கொரு கருத்தை முன்வைக்கின்றனர். தாய் நாட்டைப் பாதுகாக்காது தலைமறைவாகும் ஆப்கானிஸ்தான் இராணுவம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கண்டித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் குற்றச்சாட்டை ஆப்கான் இராணுவத்தின் 209ஆவது ஷாஹீன் படையின் செய்தித் தொடர்பாளராக இருந்த கேணல் ஹனிஃப் ரெசாய் மறுத்துள்ளார். ஆப்கானிஸ்தான் தலைமை, இராணுவ ஊழலின் பலவீனம் ஆகியவற்றால் தீவிரவாதிகள் மீள் எழுச்சி பெற்றனர் என்று ஹனிஃப் ரெசாய், ஸ்கை நியூஸிடம் கூறினார். ஆனால், இரட்டை வேடமிட்ட பாகிஸ்தானால்தான் தலிபான்கள் எழுச்சி பெற்றனர் என பஞ்ஷீரில் இருக்கும் துணை ஜனாதிபதி தெரிவித்தார்.

கேணல் ஹனிஃப் ரெசாய் 209ஆவது ஷாஹீன் கார்ப்ஸின் செய்தித் தொடர்பாளராக இருந்தார். இது வடக்கு நகரமான மசார்-இ-ஷெரிஃபில் அமைந்துள்ள ஆப்கான் இராணுவப் பிரிவாகும்.

இப்போது அவர் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே அடையாளம் தெரியாத இடத்திலிருந்து ஸ்கை நியூஸுடன் தொலைபேசியில் உரையாடினார். அங்கு அவரும் அவரது குடும்பத்தினரும் தலைமறைவாக உள்ளனர். அங்கு கூட தமக்கு பாதுகாப்பு இல்லை என்றார்.

20 வருடப் போரில் 66,000 ஆப்கான் இராணுவத்தினர் இறந்தனர். இது அமெரிக்காவுக்குத் தெரியாதா என அவர் கேள்வி எழுப்புகிறார்.

அவர் ஆகஸ்ட் 11 அன்று அப்போதைய ஜனாதிபதி அஷ்ரப் கானியின் மசார்-இ-ஷெரீஃப் வருகைக்கு வடக்கில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. அன்று, அருகிலுள்ள குண்டூஸில், நூற்றுக்கணக்கான வீரர்கள் தலிபான்களிடம் சரணடைந்தனர். கேணல் ரெசாய் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே பதுங்கியுள்ளனர். மசார்-இ-ஷெரீப்பில், உள்ளூர் வல்லுநர்களான அட்டா முகமது நூர், அப்துல் ரஷித் தோஸ்தம் ஆகியோருடன் கானி ஒரு சந்திப்பை நடத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, வடக்கு ஆப்கானிஸ்தானின் கடைசி நகர்ப்புறமான மசார்-இ-ஷெரீப், தலிபான்களிடம் வீழ்ந்தது. அடுத்த நாள் தலைநகர் காபூலும் தலிபான்களால் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதி அஷ்ரப் கானி நாட்டை விட்டு ஓடிவிட்டார். அவரை நம்பிய மக்களையும், நாட்டையும் விட்டு ஜனாதிபதி வெளியேறியது அவமானமானது.

“அஷ்ரப் கனிக்கு ஆப்கானிஸ்தான் மக்களிடமோ அல்லது நாட்டிலோ ஆர்வம் இல்லை” என்று கேணல் ரெசாய் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் பணி தோல்விக்கு முக்கிய பங்களிப்பாளராக இல்லாவிட்டால் அரசியல் மற்றும் இராணுவ அளவில் உள்ளூர் ஊழல் மிக முக்கியமானதாக இருக்கும் என்று அமெரிக்க உளவுத்துறை அறிக்கைகள் நீண்டகாலமாக எச்சரித்து வந்தன. சர்வதேசப் படைகள் திரும்பப் பெற்ற பின்னரும், அவர்கள் விட்டுச் சென்ற சொத்துகள் முறையாக விற்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. ஒரு சில தனிநபர்கள் அவற்றின் வருமானத்தை அபகரித்தனர்.



“அரசியலிலும் இராணுவத்திலும் மிக விரிவான ஊழல் இருந்தது” என்று அவர் கூறினார். நான் உட்கார்ந்து உங்களுக்கு உதாரணங்களைக் கொடுத்தால், பல, பல உதாரணங்கள் இருக்கும், எரிபொருள், உணவு, சம்பளம் பற்றிய விஷயங்களை நான் மேற்கோள்காட்ட முடியும் கேணல் ரெசாய் கூறினார்.



ஆப்கான் மக்கள் தலிபான்களின் ஆட்சியை விரும்பவில்லை என கேணல் ரெசாய் உறுதியாகக் கூறினார்.

ஆப்கான் ஜனாதிபதியாக தன்னை அறிவித்துக் கொண்டவரும் தலிபான்களை எதிர்த்து கொரில்லா போரில் ஈடுபட்டவருமான அம்ருல்லா சலே சி.என். என்னுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் பாகிஸ்தானின் தலிபான்கள் ஆதரவு போக்கை வெகுவாகக் கண்டித்தார். ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி நாட்டை விட்டு தப்பியோடியதால் துணை ஜனாதிபதியான தான் தான் இப்போ ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி என அறிவித்துள்ளார் அம்ருல்லா சலே.

தலிபான்கள் ஒருபோதும் நெருக்கடியில் இருந்ததில்லை என்பது தெளிவு. பாகிஸ்தானை தங்கள் அடிப்படை ஆதரவாக வைத்துக் கொண்டுள்ளனர். தலிபான்களின் பிடியில்தான் பாகிஸ்தானே உள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் ஒத்துழைக்க அமெரிக்கா பணம் கொடுத்தது. ஆனால் அமெரிக்கா எவ்வளவு பணம் கொடுத்ததோ அந்த அளவுக்கு பயங்கரவாதத்துக்கும், தலிபான்களுக்கும் பாகிஸ்தான் ஆதரவளிக்கும் தைரியமும் வளர்ந்தது. எனவே அணு ஆயுத நாடான பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஆதரித்ததையோ ஆப்கானிஸ்தானின் மேற்கத்திய கூட்டணிக்கு எதிராக போர் மூண்டதைப் பற்றியோ பேசவே இல்லை.

டோகா பேச்சுவார்த்தைகள் தலிபான்கள் சொன்ன வாக்கைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பதை நியாயப்படுத்தியது. வாக்குறுதியை தூக்கி எறிந்து விட்டு உலக நாடுகளை முட்டாள்களாக்கி விட்டனர் தலிபான்கள். டோகா பேச்சுவார்த்தையின் நோக்கமே உலக நாடுகளின் கருத்தை பிரித்து வைத்து அமைதி பேச்சுவார்த்தையைப் பற்றி நம்பிக்கை ஏற்படுத்தத்தான், ஆனால் அப்படி ஒன்று இல்லை என்பதே அம்சருலாவின் வாதம்.

தலிபான்கள் ஆப்கானை கைப்பற்றியுள்ளனர். வெளிநாட்டுப் படைகளும் அவர்களுக்கு உதவியவர்களில் பலரும் ஆப்கானை விட்டு வெளியேறி விட்டனர். ஆனால், நாட்டை விட்டு வெளியேற வழி இல்லாத ஆப்கான் மக்களுக்கு ஆதரவு யார் என்பதே இன்றைய மிகப் பெரும் கேள்வி. தலிபான்களின் ஆட்சி எப்படி இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. எதைச் செய்ய மாட்டோம் என தலிபான்கள் தெரிவித்தனரோ அதனை கச்சிதமாக செய்கிறார்கள்.

ஆப்கானின் புதிய அரசாங்கத்தினுடைய கொள்கைகள், வெளிநாட்டு உறவுகள் என்பனவே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றன.

**-ரமணி-**

# புலனாய்வு தகவலுக்கமைய தெற்கு ஆழ்கடல் பகுதியில் கடற்படையினரால் அதிரடி சுற்றிவளைப்பு

## 2,321 மில்லியன் ரூபா பெறுமதியான 290 கிலோ ஹெரோயினுடன் ஐவர் கைது







புலனாய்வு தகவலுக்கமைய கடற்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் இணைந்து தெற்கு ஆழ்கடல் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நாட்டுக்கு கொண்டுவர முயற்சித்த 290 கிலோ 200 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை ஏற்றிவந்த நீண்டநாள் மீன்பிடி படகுடன் சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் நீண்டநாள் மீன்பிடி படகு என்பன நேற்று காலை கரையொதுங்கப்பட்டதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடற்படை புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட புலனாய்வு விசாரணைகளின் மூலம் கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் தெற்கு, ஆழ்கடல்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கரையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான நீண்டநாள் படகு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

அதன்போது அந்த படகில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 பைகளில் 259 பொதிகளாக வைக்கப்பட்டிருந்த இந்த ஹெரோயின் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே இந்த போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஹெரோயின் போதைப்பொருள் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ள நீண்டநாள் மீன்பிடி படகு நேற்று முன்தினம் நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளதுடன் சர்வதேச கடற்பரப்பில் வெளிநாட்டு வியாபாரிகளினால் இந்த ஹெரோயின் தொகை இவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர். அதேபோன்று, கைப்பற்றப்பட்டுள்ள இந்த போதைப்பொருள் தொகையின் சந்தைப்பெறுமதி 2 ஆயிரத்து 321 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதுடன் இதன்போது அஹுங்கல்ல, பலபிட்டிய மற்றும் ஹபராதுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31 - 37 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 19 ஆவது நாள் திருவிழாவான சூர்யோற்சவம் நேற்று காலை இடம்பெற்றது. காலை 6.45 மணியளவில், வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சூரியபகவான் எழுந்தருளி உள் வீதி வலம் வந்தார்.

# தோட்ட நிர்வாகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ரொசர்ட் தோட்ட மக்கள் பணிப் பகிஷ்கரிப்பு

*(பதுளை நிருபர்)*

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராகவும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் பதுளை, ரொசர்ட் முதலாம் பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, தோட்ட கம்பனிகளின் வெளியார் உற்பத்தி முறையால் தொழிலாளர்களுக்கு நிலையான வருமானத்தைப் பெறமுடியாது. ஆனால் நிர்வாகங்களுக்கு எவ்வித உற்பத்தி செலவுகளும் இன்றி இலாபத்தை சம்பாதித்துக் கொள்ள முடியும். ஆகையால் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுக்க மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

வெளியார் உற்பத்தி முறையில் வழங்குகின்ற காணிகளில் தேயிலை மட்டும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். கட்டிடங்கள் அமைக்கக் கூடாது. கைமாறவும் கூடாது. நிர்வாகியின் ஆலோசனைப்படியே காணியை பராமரிக்க வேண்டும். பறிக்கும் ஒவ்வொரு தேயிலைக் கொழுந்து கிலோவிலும் காணிக்குரிய குத்தகைப் பணம் அறவிடப்படும். தேயிலைக் கொழுந்து பறித்து நிர்வாகத்திடம் ஒப்படைத்து அதற்குரிய பணம் கொடுக்கப்படுகின்றபோது நிர்வாகத்தால் வழங்கப்பட்ட உரம், இரசாயனங்கள் போன்றவற்றுக்குரிய தொகை கழித்துக் கொள்ளப்படும்.



உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட காணியிலுள்ள மரங்கள், கற்கள், மண் மற்றும் காணிக்குரிய எல்லை போன்றவைகளை அவர்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உற்பத்தியாளரோ அல்லது அவரின் சார்பாக எவரோ அல்லது வேறு எவரோ காணியையும் அதிலுள்ளவைகளையும் சேதப்படுத்தினால் அதற்குரிய நட்டஈட்டை உற்பத்தியாளரே கம்பனிக்கு செலுத்தவேண்டும்.

உற்பத்தியாளர் வேறு எவரையும் காணியில் வேலைக்கு அமர்த்தி நட்டஈடு போன்றவைகளை செலுத்த நேரிட்டால் உற்பத்தியாளரே பொறுப்பெடுத்து செலுத்த வேண்டும். காணி ஒப்பந்தக் காலம் நிறைவடைகின்றபோது நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டும். அதற்கு எவ்வித நட்டஈடும் கோரமுடியாது. கொழுந்து பறித்து நிர்வாகத்திடம் ஒப்படைக்கும்போது வாடி வதங்கிய கொழுந்துக்காக குறிப்பிட்டளவு கொழுந்து கிலோ கழித்துக் கொள்ளப்படும்.

உற்பத்தியாளரால் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட சரத்துகளுக்கு பாதகமாக செயற்பட்டால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு காணியும் நிர்வாகத்தால் எடுக்கப்படுவதாக தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

# 'யாழ்ப்பாண பரனி பனஞ்சாராயம்' என்ற பெயரில் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்த இருவர் கைது



*(இக்பால் அலி)*

அலவ்வ பிரதேசத்தில் யாழ்ப்பாண பரனி பனஞ்சாராயம் என்ற பெயரில் அடைக்கப்பட்ட சட்டவிரோத மதுபான போத்தல்களுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் பிரபாத் ஜயவிக்கிரம தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அலவ்வ பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்த இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த சாராய விற்பனை நிலையத்திலிருந்து ஆயிரத்து 188 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேல் மாகாண மதுவரி ஆணையாளர் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கிணங்க இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போலியாக உற்பத்தி செய்யப்பட்ட மதுபான போத்தல்களுக்கு "யாழ்ப்பாணம் பரனி பனஞ்சாராயம்" எனும் பெயரில் லேபல் ஒட்டி விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போத்தல்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போத்தல்களில் அடைக்கப்பட்டிருந்த மதுபானத்தை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் பிரபாத் ஜயவிக்கிரம மேலும் தெரிவித்தார்.

# குற்றம் தவிர்

Police Roundup

தொகுப்பு: நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்த ராஜகருணா மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜயவடனகம, கலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### அங்குலான

அங்குலான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவட வீதி பாலம் அமைந்துள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் அங்குலான பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 04 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவர் கைது

### - மில்லனிய

மில்லனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெசல்கமுவ பிரதேசத்தில் மில்லனிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, பணத்தை வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 2 இலட்சத்து 27 ஆயிரத்து 330 ரூபா பணம் பொலிஸாரினால் கைபற்றப்பட்டுள்ளது. களுத்துறை, பாணந்துறை, தொரோன்துட்டுவ மற்றும் மில்லனிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 - 58 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹொரணை நீதிவான் நீதிமன்றத்தில், எதிர்வரும் 14ஆம் திகதி ஆஜராகுமாறு அறிவித்து பொலிஸார் பிணையில் விடுதலை செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மில்லனிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் .

## கொலைச் சம்பவம் -

### ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிரிஜ்ஜவில பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளான நபரொருவர் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவுஸ்கோன் வீதி, மிரிஜ்ஜவில பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காணியொன்றில் மாடுகள் உள்நுழைந்து அந்த காணியில் பயிரிடப்பட்டிருந்த பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தியது தொடர்பில் இருதரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் அவர்களை கைதுசெய்வதற்காக ஹம்பாந்தோட்டை துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

### வாழைத்தோட்டம்

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிரானியா வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது தீர்வை வரியின்றி கொண்டுவரப்பட்ட சட்டவிரோத சிகரெட்டுகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு வாழைத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மிரானியா வீதியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர்கள் கைது

### யக்கல

யக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதுன்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை கோனஹேன முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 33 லீற்றர் சட்டவிரோத மதுபானம், 310 லீற்றர் கோடா, 01 சிலிண்டர் மற்றும் ஒரு வாயு அடுப்பு என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு யக்கல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

முதுன்கொட பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கொஸ்வத்த

கொஸ்வத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதலேகம - கொஸ்வத்த வீதியில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை புத்தளம் முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 37 லீற்றர் சட்டவிரோத மதுபானத்தை முச்சக்கர வண்டியில் எடுத்துச் சென்ற நபரொருவர் கைதுசெய்யப்பட்டு கொஸ்வத்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் ஏற்றிச்சென்ற முச்சக்கர வண்டியும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. கொஸ்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

### தங்காலை

தங்காலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலதுடுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் தங்காலை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு தங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பலதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கஞ்சா பயிர்ச்செய்கை நிலம் சுற்றிவளைப்பு

### கொஸ்லந்த

கொஸ்லந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்வெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் புத்தல விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் கஞ்சா பயிர்ச்செய்கை நிலமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது, 2 ஆயிரம் கஞ்சா செடிகளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு கொஸ்லந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

எதிலிவெவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட நபரொருவர் கைது

### - மஹஓயா

மஹஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெதிரெக்க பிரதேசத்தில் கடந்த 29ஆம் திகதி மஹஓயா விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திர கொள்கைகளை மீறி ரிப்பர் ரக வாகனத்துக்கு மணல் ஏற்றிக்கொண்டிருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டு மஹஓயா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தனுவிலபிட்டிய, மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால் அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு

## 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூடைகள் கண்டுபிடிப்பு






(அட்டாளைச்சேனை, மாளிகைக்காடு நிருபர்கள்)

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால் ஒலுவில், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் (30) காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டபோது பதுக்கிவைக்கப்பட்ட 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட நெல் மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

பொருட்களை விற்பனை செய்யும்போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது, பொருட்களைப் பதுக்கிவைப்பது தொடர்பாக பொது மக்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபை மாவட்ட பொறுப்பதிகாரி சாலின்ட பண்டார நவரத்ன தலைமையில் சென்ற குழுவினர் பதுக்கி வைக்கப்பட்ட நெல் மூடைகளை கண்டுபிடித்தனர்.

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையில் கடமையாற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான ஏ.எச்.எச்.எம். நபார், இசட்.எம்.சாஜீத், ஏ. றிஸ்வான், ஏ.எஸ்.எஸ்.அஜ்மல் இச்சுற்றிவளைப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பல களஞ்சியசாலைகளில் அனுமதி பெறாமல் நெல் மூடைகள் காணப்பட்டன. வியாபார நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், மேலும் ஒரு சில வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சில வர்த்தகர்கள் தாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு அமைய, நெல் மூடைகளின் அளவிற்கு ஏற்ப வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலின்ட பண்டார நவரத்ன இதன்போது தெரிவித்தார்.

# திருமலை மாவட்ட செயலக அதிகாரிகள் இருவருக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம்




(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கே.பரமேஸ்வரன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கே.விஜயதாசன் ஆகிய இருவருக்கும் பதவி உயர்வுடனான இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனை முன்னிட்டு அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இருவருக்கும் நினைவுச்சின்னம், நினைவுப்பரிசில்கள் என்பன அரசாங்க அதிபர் தலைமையிலான உத்தியோகத்தர்களால் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும் இருவரும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவைக்கான திறந்த போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட இவ்விரு உத்தியோகத்தர்களும் 27வருடங்கள் அர்ப்பணிப்புடனான சேவையை மாவட்ட மக்களுக்காக வழங்கியுள்ளனர்.

கே.பரமேஸ்வரன் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் கே.விஜயதாசன் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலையில் கைவிடப்பட்ட நிலையில் பிளாஸ்டிக் கேனிலிருந்து கைக்குண்டுகள் மீட்பு



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரீன் வீதியில் பிளாஸ்டிக் கேனில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுகள் தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் மாலை கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கல்லூரி வீதி மற்றும் கிறீன் வீதி இணையும் சந்தியில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்கு முன்னால் இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக தெரியவருகின்றது.

ஆனாலும் கடந்த இரண்டு மூன்று நாட்களாக பிளாஸ்டிக் கேன் அவ்விடத்தில் இருந்ததாகவும் அந்த கேனை நாய் கடித்து குதறிய நிலையில், அதனுள் காணப்பட்ட கைக்குண்டுகள் வெளியே வீசப்பட்டதாகவும் இதனையடுத்து வீதியால் சென்ற சிலர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திருகோணமலை நகர சபை சுத்திகரிப்பு தொழிலாளிகள் அந்தப் பகுதியை சுத்தப்படுத்தும் போது பிளாஸ்டிக் கேன் இருப்பதை அவதானித்த போதிலும் குறித்த பிளாஸ்டிக் கேனை காலால் உதைத்து விட்டு குப்பையை மாத்திரம் சுத்தப்படுத்தும் காட்சி வீடொன்றின் சி.சி.டி.வி. காணொளி மூலம் கண்டறியப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருந்தபோதிலும் இந்த கைக்குண்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நீதிமன்ற அனுமதியைப் பெற்றவுடன் கைக்குண்டை செயலிழக்கச் செய்ய உள்ளதாகவும் துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவ இடத்திற்கு திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் துறைமுக பொலிஸார் இணைந்து விசாரணைகளை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலையில் மறு அறிவித்தல் வரை அனைத்து மதுபானசாலைகளுக்கும் சீல்

## மறைமுகமாக வியாபாரம் செய்தமை அம்பலம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் மறு அறிவித்தல் வரை அனைத்து மதுபானசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள மாகாண பணிப்பாளர் ஏ.தர்மசீலனின் பணிப்புரைக்கு அமைவாக திருகோணமலை மதுவரித் திணைக்கள அதிகாரி எஸ்.கே.வணிக சிங்கவின் வழிகாட்டலுக்கமைவாக திருகோணமலை பிராந்தியத்திற்கு பொறுப்பான பொறுப்பதிகாரி ஜானி அத்தநாயக்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் திருட்டுத்தனமாக மதுபானசாலைகள் திறக்கப்பட்டதையடுத்து, அனைத்து மதுபானசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் முதல் மறுஅறிவித்தல் வரை அனைத்து மதுபானசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டதாகவும் திருகோணமலை மதுவரித் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வாகனங்களுடன் அறுவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதியில் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறி சட்டவிரோதமான முறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆறு சிறிய லொறிகளுடன் முச்சக்கர வண்டியொன்றையும் ஆறு நபர்களையும் நேற்று முன்தினம் (30) மாலை கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

கல்லடி நாவற்குடா மற்றும் ஆரையம்பதி பிரதான வீதிகளில் கொவிட்- 19 பரவும் அளவிற்கு சட்டவிரோதமான முறையில் மரக்கறி மற்றும் பல்வேறு உணவுப்பொருட்களை விற்பனை செய்தவர்களே இவ்வாறு வாகனங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



பலமுறை ஒலிபெருக்கி மூலம் அறிவித்தும் அதனை மீறிச் செயற்பட்டவர்களே கைதானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் ஐஸ் மற்றும் கசிப்புடன் மூவர் கைது

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் ஐஸ் மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர் காத்தான்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொலிஸார் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது 580 மற்றும் 550 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் காத்தான்குடியில் இருவரும் ஒரு போத்தல் கசிப்புடன் ஆரையம்பதியில் ஒருவருமாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் வீடுபுகுந்து பெண்ணொருவரின் கழுத்திலிருந்த 3 பவுண் தங்கச் சங்கிலி பறிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் வீட்டில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த பெண் ஒருவரின் கழுத்தில் கொள்ளையர் ஒருவர் கத்தியை வைத்து அவரின் கழுத்தில் இருந்த 3 பவுண் தங்கச் சங்கிலியைப் பறித்து எடுத்துச்சென்ற சம்பவம் நேற்று முன்தினம் (30) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள வீடொன்றின் உரிமையாளர் தனது வீட்டை இடித்து புனரமைத்துக்கொண்டு, அதே காணியில் தற்காலிகமாக வீடொன்றை அமைத்து வசித்துவருகின்ற நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் வயதான மாமியார் உட்பட 3 பேர் உறங்கிக் கொண்டிருந்துள்ளனர்.

இந்நிலையில் அமைக்கப்பட்ட தற்காலிக வீட்டின் தகரக் கதவை திறந்து, வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர் உறக்கத்தில் இருந்த 45 வயதுடைய பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலியை கழற்றித் தருமாறும் அல்லது கத்தியால் வெட்டிக் கொலைசெய்வதாகவும் மிரட்டியதையடுத்து, தங்கச் சங்கிலியை கழற்றிகொடுத்துள்ளார். பின்னர் கொள்ளையன் அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த வீட்டிற்கு பொலிஸ் தடயவியல் பகுப்பாய்வு பிரிவினர் சென்று விசாரணையை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊரடங்கு விதிமுறையை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

(க-சரவணன்)

மட்டக்களப்பில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ததுடன், வீதிகளில் பயணித்தவர்களை பொலிஸார் பிடித்து எச்சரித்து திருப்பி அனுப்பும் விசேட நடவடிக்கை நேற்று முன்தினம் (30) மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது. மண்முனை வடக்கு பிரதேச செயலக கொரோனா செயலணி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பொலிஸார் இரண்டாவது நாளாகவும் மாநகர சபையினருடன் இணைந்து புதூர் மற்றும் மாநகரசபை பகுதிகளிலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் வீதி ரோந்து நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது ஊரடங்கு சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்ட சில வர்த்தகர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து கடைகளை பூட்டவைத்ததுடன், வீதிகளில் பயணித்தவர்களை நிறுத்தி சோதனையிட்டு அநாவசியமாக வந்தவர்களை வீடுகளுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையினையும் மேற்கொண்டனர்.

# பரீட்சை திணைக்கள இணையதளத்தில் விசேட தர கடந்தகால வினாப்பத்திரங்களை இற்றைப்படுத்துக

## அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் கோரிக்கை!

(மட்டக்களப்பு மேலதிக நிருபர்)

ALL MANAGEMENT SERVICE OFFICERS TRADE UNION
AMSOTU

இலங்கை பரீட்சைத் திணைக்கள இணையதளத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களது அதி விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையின் கடந்தகால வினாப்பத்திரங்களை இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்தும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜி.முபாரக் மற்றும் உப செயலாளர் எம்.எம்.பைஸ் ஆகியோர் ஒப்பமிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்கள இணையதளத்தில் க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) மற்றும் நாடளாவிய சேவைகளின் கடந்தகால வினாப்பத்திரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளபோதும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை அடிப்படையிலான அதி சிறப்பு தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையின் கடந்த கால வினாப்பத்திரங்கள் மாத்திரம் உள்ளடக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் அதிசிறப்பு தரத்திற்கான போட்டிப் பரீட்சைக்கு தங்களை தயார்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்வதோடு குறித்த பரீட்சை வினாப்பத்திரம் குறித்த அனுபவ அறிவு, ஆற்றல் இல்லாத நிலையில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் பரீட்சையின் கடந்தகால வினாப்பத்திரங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

**உலக செய்திகள்**

# ஆப்கானை துறந்த அமெரிக்க துருப்புகள்: தலிபான்களின் ஆளுகைக்குள் காபூல்

## ''போர் விமானங்களை செயலற்றதாக்கி விட்டோம்'' - அமெரிக்கா

## ''தலிபான்களின் வெற்றி படையெடுப்பாளர்களுக்கு பாடம்'' - தலிபான்கள்







ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்க துருப்புகள் அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் ''ஆப்கானில் தலிபான்களுக்கு கிடைத்த வெற்றி, படையெடுப்பாளர்களுக்கு ஒரு பாடம்'' என தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிலிருந்த அமெரிக்கப் படைகள், 20 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் முழுமையாக அங்கிருந்து வெளியேறினர். இதனைத் தொடர்ந்து காபூல் விமான நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் தலிபான்கள் கொண்டு வந்தனர். ஓடுபாதையில் நடந்து சென்ற தலிபான்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதுதொடர்பில் தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் சபிஹூல்லாஹ் முஜாகித் கூறியதாவது:

''ஆப்கானிஸ்தானுக்கு பாராட்டுகள். இது எம் அனைவருக்கும் கிடைத்த வெற்றி. தலிபான்களின் வெற்றி, படையெடுப்பாளர்களுக்கு கிடைத்த பாடம். தலிபான்களின் ஆட்சி முந்தைய ஆட்சி போல் இருக்காது. பாதுகாப்பு படையினர் பொறுமையாகவும் சிறப்பாகவும் செயற்படுவார்கள். அமெரிக்கா மற்றும் உலக நாடுகளுடன் சிறந்த நட்புறவையே நாங்கள் விரும்புகிறோம். அனைத்து நாடுகளுடன் சிறந்த தூதரக உறவை ஏற்படுத்தவே நாங்கள் விரும்புகிறோம்'' - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்க துருப்புகள் அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர். காபூலிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் அங்குள்ள அமெரிக்காவின் 73 போர் விமானங்கள், நவீன ஏவுகணை தடுப்பு உபகரணங்கள் உள்ளிட்டவற்றை செயலற்றதாக்கி விட்டதாக, அமெரிக்க இராணுவ உயரதிகாரி கென்னத் மெக்கன்சி தெரிவித்துள்ளார்.

இந்த விமானங்களால் மீண்டும் பறக்க முடியாது என்றும் தலிபான்களால் அவற்றை இயக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். காபூல் விமான நிலையத்தில் பாதுகாப்பு பணிகளில் சுமார் 6 ஆயிரம் அமெரிக்க துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டனர் என கூறிய அவர், அவர்கள் கடைசியாக நாடு திரும்புவதற்கு முன்னர் தலா 10 இலட்சம் டொலர் மதிப்புள்ள 70 இராணுவ ஆயுத கவச வண்டிகளையும், 27 Humvees இராணுவ ட்ரெக்குகளையும் செயலற்றதாக மாற்றி விட்டனர் என தெரிவித்தார்.

அதே நேரம், காபூலிலிருந்து புறப்படும் வரை பாதுகாப்பு தேவை என்பதால், ரொக்கெட் எதிர்ப்பு கருவியான C-RAM மட்டும் அதே நிலையில் விட்டு வைக்கப்பட்டு அதன் பின்னர் செயலற்றதாக மாற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.



**20 ஆண்டுகளாக பாதுகாப்புப் பணி**

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்கப் படையினர் நேற்றுமுன்தினம் இரவு முதல் முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டனர்.

அமெரிக்க இரட்டைக் கோபுரம் தகர்ப்புக்குப் பழிவாங்கும் விதமாக ஆப்கானிஸ்தானிலிருந்த அல் - கொய்தா அமைப்பின் மீது அமெரிக்கா படையெடுத்தது. அந்த அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னரும் அங்கிருந்த அமெரிக்கப் படையினர் ஓகஸ்ட் 31ஆம் திகதியுடன் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்திருந்தார்.

**ஆப்கானைவிட்டு வெளியேறிய கடைசி அமெரிக்க இராணுவ சிப்பாய்**

அதேபோல் நேற்றுமுன்தினம் இரவுடன் அமெரிக்க வீரர்கள், தூதரக அதிகாரிகள் அடங்கிய கடைசி அணி ஆப்கானிஸ்தானிலிருந்து புறப்பட்டது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானிலிருந்து கிளம்பிய இறுதி விமானத்தில் கடைசியாக ஏறிய அமெரிக்கர் மேஜர் ஜெனரல் கிறிஸ் டோனாஹூ என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. அவரது புகைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

ஆப்கானிலிருந்து அமெரிக்க இராணுவம் முழுமையாக வெளியேற்றப்பட்ட போதும், காபூல் விமான நிலையம் மட்டும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினத்துடன் மீட்புப் பணிகள் முழுமையாக முடிவடைந்ததையடுத்து, காபூலில் பாதுகாப்புப் பணியிலிருந்த அமெரிக்க இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு கடைசி விமானமாக சி-17 கிளம்பியது.

இந்த விமானத்தில் கடைசி இராணுவ வீரராக அமெரிக்க மத்திய கமெண்டின் 82ஆவது ஏர்போர்ன் கொமெண்டர் மேஜர் ஜெனரல் கிறிஸ் டோனாஹூ ஏறியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

**பென்டகன் கவலை**

காபூலிலிருந்து அமெரிக்கப் படைகள் முற்றிலும் வெளியேறிவிட்டாலும் திட்டமிட்டபடி அனைவரையும் வெளியேற்ற முடியவில்லை என்று பென்டகன் தெரிவித்துள்ளது.


ஆப்கானைவிட்டு வெளியேறிய கடைசி அமெரிக்க இராணுவ சிப்பாய்

தலிபான்கள் மேலும் 10 நாட்கள் அவகாசம் அளித்திருந்தால் வெளிநாட்டு படைகளுக்கு உதவிய அனைவரையும் பாதுகாப்பாக கொண்டு சென்றிருக்க முடியும் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அமெரிக்காவின் கடைசி இராணுவ விமானம் காபூலிலிருந்து புறப்பட்டுச் சென்றதை தலிபான்களும் உறுதிசெய்தன.

அதனை கொண்டாடும் விதமாக நள்ளிரவு நேரத்திலும் வானை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஓகஸ்ட் 14ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் இரவு வரை 1.22 இலட்சத்திற்கும் மேற்பட்டோரை அமெரிக்கா ஆப்கானிலிருந்து வெளியேற்றியுள்ளது. ஆப்கானை விட்டு புறப்படுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன் கூட காபூல் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய ஐ.எஸ். கோரசான் தீவிரவாதிகளுக்கு ஏவுகணை தாக்குதல் மூலம் அமெரிக்கா பதிலடி கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்கா ட்ரோன் தாக்குதல்**

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா ட்ரோன் விமானம் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர்.

கோரசான் மாகாணத்தைச் சேர்ந்த அஹ்மதி மற்றும் நெஜ்ராபி குடும்பத்தினர் தங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டு காபூல் விமானநிலையம் புறப்பட்டபோது ஐ.எஸ்.-கே அமைப்பினர் இருப்பதாக நினைத்த அமெரிக்கப் படையினர் ட்ரோன் விமானம் மூலம் அஹ்மதி புறப்பட்ட காரின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர். தவறுதலாக நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்தப்படும் என அமெரிக்கா தெவித்துள்ளது.

# முன்கூட்டியே ஆப்கானுக்குள் நுழைந்த அல்-கொய்தா - ஐ.எஸ்.



அல் - கொய்தாவும், ஐ.எஸ். அமைப்பும் ஏற்கனவே ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்துவிட்டன என பின்லேடனின் பாதுகாவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் பாதுகாப்புப் படையின் தலைவராக இருந்த அமீன் உல் -ஹக் 20 ஆண்டுகளுக்குப் பின் ஆப்கானிஸ்தானிலுள்ள தனது சொந்த ஊருக்குத் திரும்பினார். தோரா போரா மலையில் பின்லேடன் இருந்தபோது அவருடன் இருந்த அமீன், அமெரிக்கப் படைகளின் தாக்குதலின்போது தப்பிச் சென்றார்.

தற்போது நங்கர்ஹர் மாகாணத்திலுள்ள சொந்த ஊருக்கு ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்களுடன் அவர் திரும்பியுள்ளார். இவரைத் தொடர்ந்து ஏனைய அல்-கொய்தா தீவிரவாதிகளும் நாடு திரும்ப வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களையும் தாக்கும் வீரியம் கொண்ட சி12 புதிய திரிபு

தடுப்பூசியால் பெற்ற நோய் எதிர்ப்பு சக்தியையும் தாண்டி டெல்ட்டா வகை வைரஸை போல மிக தீவிரமாக பரவக்கூடிய திறன்கொண்ட புதிய சி12 வகை கொரோனா வைரஸ் தென்னாபிரிக்கா உட்பட பல நாடுகளில் பரவியிருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை 21,79,89,863பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 45,25,235பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 19,48,96,205பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 18,568,423பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்றுவருவதுடன் அவர்களில் 1,13,728பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தடுப்பூசிகள் மக்களுக்கு செலுத்தப்பட்ட பின்னர் புதிய வகை வீரியம் மிக்க கொரோனா வைரஸ் மாறுபாடுகள் உலகம் முழுவதும் பரவி வருகிறது. இந்தியாவில் 2ஆம் அலைக்கு காரணமான டெல்ட்டா வகை வைரஸ், உலக நாடுகளை அச்சுறுத்துகிறது.

தற்போது அந்த வரிசையில் வீரியம் மிக்க சி12 வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் தொற்று நோய்க்கான தேசிய நிறுவன ஆய்வாளர்கள் சி12 மரபணு மாற்ற கொரோனா வைரஸை கண்டறிந்துள்ளனர். இந்த கொரோனா வைரஸ் குறித்து மதிப்பிடப்படாத ஆய்வு முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதன்படி தடுப்பூசி போட்டவர்களையும் தாக்கும் வீரியம் கொண்டதாக சி12 வகை வைரஸ் இருக்க வாய்ப்பு இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆல்பா மற்றும் பீட்டா வகை வைரஸ் பாதிப்பால் ஏற்கனவே ஆன்டிபாடிகளை உருவாக்கிய நோயாளிகளையும் மீண்டும் தொற்றும் திறன், சி12 வகை வைரஸ்களுக்கு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த ஆய்வு முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அமெரிக்காவில் மீண்டும் தீவிரமடைந்த கொரோனா**

அமெரிக்காவில் அதி தீவிரமாக மீண்டும் கொரோனா பரவல் பரவி வருவதால் நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் 78 சதவீத படுக்கைகள் நிரம்பியுள்ளன. நாளொன்றில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 1.50இலட்சத்தை கடந்துள்ளது.

உலக வல்லரசாக கருதப்படும் அமெரிக்கா தான் கொரோனாவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் முன்னிலையிலுள்ளது. கொரோனா முதல் அலை பரவத் தொடங்கியபோதே அங்கு பலர் உயிரிழந்தனர். அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பொறுப்பேற்ற பின்னர், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் அளித்தார். மேலும், கொரோனா தடுப்பூசி பணிகளை அதிகரிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அங்கு எடுக்கப்பட்டன.

இதனால் கொரோனா கட்டுக்குள் வரத் தொடங்கியது. இதையடுத்து 2 டோஸ் தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்கள் இனி பொதுவெளியில் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்ற தளர்வு அளிக்கப்பட்டதன் விளைவாக அமெரிக்காவில் தற்போது கொரோனா பாதிப்பு மீண்டும் உச்சத்தை அடைய காரணமாக அமைந்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் சராசரியாக 11 ஆயிரமாக இருந்த கொரோனா பாதிப்பு, அடுத்த 2 மாதங்களில் ஒன்றரை இலட்சமாக மாறியுள்ளது. இலட்சக்கணக்கானோர் தற்போது வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் பெரியவர்களில் 3இல் ஒருபங்கு நோயாளிகள் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படுகின்றனர்.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளும் டெல்ட்டா வகை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். தினசரி உயிரிழப்போரின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளது. அமெரிக்காவில் அதிகம் நோய் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் புளோரிடாவிலுள்ள மருத்துவமனைகளில் அனைத்து படுக்கைகளும் நிரம்பிவிட்டன. மருத்துவமனைகளில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மருத்துவர்கள் செய்வதறியாமல் திணறி வருகின்றனர். தடுப்பூசி போடாவிடில் இந்த சூழல் மேலும் மோசமாகும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# நியூஸிலாந்தில் 6.2 ரிச்டர் நிலநடுக்கம்: வீதிகளில் விரிசல்; பீதியில் மக்கள்



நியூஸிலாந்தில் 6.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை அந்தமான் தீவுப்பகுதியிலும் நேற்று 4.2ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் கெர்மடெக் தீவுப்பகுதியில் நேற்று ஏற்பட்ட 6.2 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அங்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. மேலும் சேத விபரம் குறித்து உடனடியாக தகவல் தெரியவில்லை.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு 40 அடி கி.மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் அங்குள்ள வீடுகள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் அங்கிருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அங்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

பல இடங்களில் வீதிகளில் பிளவு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. எனவே மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

நியூஸிலாந்து, பசுபிக்கின் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இங்கு கடலுக்குக் கீழேயுள்ள பல டெக்டோனிக் பிளேட்களின் குறுக்குவெட்டுப் பகுதிகளில்தான் எரிமலை மற்றும் நிலநடுக்கத்தின் மையம் உள்ளது. இதன் காரணமாகவே நியூஸிலாந்தில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகின்றது. அவுஸ்திரேலியாவுக்கு மேல் உள்ள குட்டி நாடான நியூஸிலாந்து அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளில் ஒன்று. இந்நிலையில், தற்போது நியூஸிலாந்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நியூஸிலாந்து கெர்மடெக் தீவுப்பகுதியின் அருகே ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் அந்நாடு முழுவதும் உணரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய வீரர் வினோத்குமாரின் பதக்கம் திரும்பப் பெறப்பட்டது



வட்டு எறிதல் எப்52 பிரிவில் வினோத் குமார் பங்கேற்க தகுதியற்றவர் என தொழில்நுட்ப குழு முடிவு செய்துள்ளதால் அவருக்கு வழங்கப்பட்ட வெண்கல பதக்கம் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான 16ஆவது பராலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில் இந்தியா சார்பில் 54 வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். வட்டு எறிதல் வீரர் வினோத்குமார் வெண்கல பதக்கம் வென்றிருந்தார்.

அவர் எப் 52 பிரிவில் ( தசைபலம் தளர்வு, கை, கால்களில் குறைபாடு மற்றும் முதுகு தண்டுவட பாதிப்பு உள்ளோர்) 19.91 மீற்றர் தூரம் வட்டு எறிந்து வெண்கலப்பதக்கத்தை வென்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இரவே அவரது வெற்றி முடிவு நிறுத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், வினோத்குமாரின் வெண்கலப் பதக்கம் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் குழுவினர் எடுத்த முடிவின் அடிப்படையில் வினோத்குமாரின் பதக்கம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. வட்டு எறிதல் எப்52 பிரிவில் வினோத் பங்கேற்க தகுதியற்றவர் என தொழில்நுட்பக் குழு முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# மனம் திறந்த பராலிம்பிக் தங்கமகன் சுமித்



பராலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் சுமித் அன்டில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

தனது முதல் வாய்ப்பிலேயே 66.95 மீற்றருக்கு ஈட்டி எறிந்து சுமித் அன்டில் அசத்தினார். அடுத்தடுத்த வாய்ப்புகளில் முறையே, 68.08, 65.27, 66.71, 68.55 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து அவர் பிரமிக்க வைத்தார். நீரஜ் சோப்ரா தனக்கு எப்படி அகத்தூண்டுதலாக இருந்தார் எனக் குறிப்பிட்டார்.

கொரோனாவினால் கடந்த 2 ஆண்டுகள் கடினமாக இருந்தது. 2020 லொக்டவுன் போது நான் என் கிராம வயல்களில் பயிற்சி செய்தேன். புதியசாலை அமைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் மண் இருந்தது. இங்கு 3 மாதங்கள் பயிற்சி செய்தேன், பிறகு ஸ்போர்ட்ஸ் அதாரிட்டி ஆஃப் இந்தியா என்னை அழைத்தது. ஆனால் கிராமத்தில் மேற்கொண்ட தீவிர பயிற்சிதான் எனக்கு தன்னம்பிக்கையை அளித்தது. செயற்கைத் தரையில்தான் பிராக்டிஸ் செய்து பழக்கம், புற்தரையில் என் கால்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டது. ஆனால் நான் விடவில்லை, சிறு தவறுகளையும் திருத்திக் கொண்டேன். சரியாகும் வரை நிறைய முயற்சிகள் செய்தேன்.

2016இல் நீரஜ் சோப்ராவைப் பார்த்த பிறகுதான் ஜாவ்லின் த்ரோ என்ற ஒரு விளையாட்டு இருப்பதையே அறிந்தேன். அதிலிருந்து ஈட்டி எறிதலில் கடினமாக உழைத்தேன். இந்தியாவில் இது குறித்த அறிதலும் அவ்வளவாக இல்லை. ஈட்டி எறிதலில் இந்தியாவிலிருந்து உலக சம்பியன்களை உருவாக்க முடியும். எனவே இது குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டால் இன்னும் பல சம்பியன்கள் உருவாவது உறுதி.

# ஐ.பி.எல்.இலிருந்து விலகினார் வொஷிங்டன் சுந்தர்



கைவிரலில் ஏற்பட்ட முறிவு பூரணமாக குணமடையாததால் பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணி வீரரான வொஷிங்டன் சுந்தர் ஐ.பி.எல். போட்டியில் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பால் பாதியில் காலவரையறை இன்றி தள்ளிவைக்கப்பட்ட 14ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் தொடரின் எஞ்சிய ஆட்டங்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய், சார்ஜா, அபுதாபி ஆகிய நகரங்களில் செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை நடக்கிறது.

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடித்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த இளம் சுழற்பந்து வீச்சு, சகலதுறை வீரர் வொஷிங்டன் சுந்தர் டெஸ்ட் தொடருக்கு முன்னதாக நடந்த பயிற்சி ஆட்டத்தின் போது கவுண்டி லெவன் அணிக்காக களமிறங்கி துடுப்பாட்டம் செய்கையில் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் பந்து வீச்சில் கைவிரலில் காயமடைந்தார். எலும்பு முறிவு ஏற்பட்டதால் சிகிச்சைக்காக அவர் நாடு திரும்பினார்.

21 வயதான வொஷிங்டனின் காயம் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. இதனால் அவர் ஐ.பி.எல். போட்டி தொடரின் எஞ்சிய ஆட்டத்தில் இருந்து விலகியிருக்கிறார். ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவிருக்கும் எஞ்சிய ஐ.பி.எல். ஆட்டங்களில் வொஷிங்டன் சுந்தர் விளையாட மாட்டார் என்று பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணி நிர்வாகம் அறிவித்தது.

வொஷிங்டன் சுந்தருக்கு பதிலாக பெங்கால் வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ்தீப் பெங்களூர் அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் அந்த அணியின் வலைப்பயிற்சி பந்து வீச்சாளராக இருந்து வருகிறார். இந்த சீசனுக்கான பெங்களூர் அணியில் இருந்து விலகும் 5ஆவது வீரர் வொஷிங்டன் சுந்தர் ஆவார். கடந்த சில தினங்களுக்கு முன்பு பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியில் வொஷிங்டன் சுந்தர் உடல் தகுதி சோதனைக்கு ஆஜரானதாகவும், அதில் அவர் தேர்ச்சி பெறாததால் விலகல் முடிவை எடுத்ததாக தெரிகிறது. காயத்தில் இருந்து முழுமையாக விடுபடாததால் ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை ஓமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் அரங்கேறவிருக்கும் 7ஆவது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் வொஷிங்டன் சுந்தர் இடம்பிடிக்க முடியுமா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ஆண்டி முர்ரேயை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் சிட்சிபாஸ்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்களுக்கான முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் பிரிட்டனை சேர்ந்த ஆண்டி முர்ரே, கிரீஸை சேர்ந்த ஸ்டெபனோஸ் சிட்சிபாஸூடன் மோதினார்.

முதல் செட்டை முர்ரே 6-2 என கைப்பற்றினார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இரண்டாவது செட்டை சிட்சிபாஸ் 7-6 என வென்றார். இதனால் சுதாரித்துக் கொண்ட முர்ரே மூன்றாவது செட்டை 6-3 என கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்திய சிட்சிபாஸ் நான்காவது மற்றும் ஐந்தாவது செட்டை 6-3, 6-4 என வென்றார்.

இறுதியில், சிட்சிபாஸ் 2-6, 7-6, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று முர்ரேவுக்கு அதிர்ச்சி அளித்தார். 4.30 மணி நேரம் நடந்த இந்த போட்டியில் வென்றதன் மூலம் சிட்சிபாஸ் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.



# பண்ட் தலைமையில் டெல்லி அணி

ஸ்ரேயாஸ் ஐயர் கப்டன் பதவி ஏற்றதும் டெல்லி அணியை அந்தளவுக்கு சிறப்பாக வழிநடத்தினார்.

எல்லா சீசன்களிலும் கடைசி அணியாக வந்து கொண்டிருந்த டெல்லி அணி கடந்த சீசனில் இறுதிப் போட்டிவரை சென்றது. அதற்கு முக்கியக் காரணம் அந்த அணியில் புதிய இளம் வீரர்கள் புகுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு டெல்லி கப்பிடல்ஸ் அணியில் இருந்து அவர் ஐ.பி.எல். தொடர் முழுவதும் விலகினார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அவர் பீல்டிங்கின் போது காயமடைந்தார். தோள்பட்டையில் எலும்பு இடம் மாறியதால் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

பண்ட்டின் தலைமையில் டெல்லி அணி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது. கொரோனா காரணமாக ஐ.பி.எல். போட்டிகள் நிறுத்தப்பட்டு இப்போது செப்டெம்பர் மாதம் ஐக்கிய அரபுகள் அமீரகத்தில் நடக்க உள்ளன. இந்த மீதமுள்ள போட்டிகளில் காயத்தில் இருந்து மீண்ட ஸ்ரேயாஸ் ஐயர் மீண்டும் கப்டன் பதவியை ஏற்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் முழு உடல் தகுதியுடன் இருந்தாலும் இன்னும் சில காலம் அவகாசம் தேவைப்படுவதாக சொல்லப்படுகிறது. அதனால் எஞ்சிய போட்டிகளிலும் பண்ட்டே கப்டனாக தொடர வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது.

# தங்கம் வென்ற ஜப்பானின் மூத்தவீராங்கனை



டோக்கியோ பராலிம்பிக்கில் பெண்கள் சி 1-3 சாலை சைக்கிள் ஓட்டப்போட்டியில் 50 வயதான கெய்கோ சுகியூரா தங்கம் பெற்று புதிய சாதனை படைத்துள்ளார். சுகியூரா 25 நிமிடங்கள் 55.76 வினாடிகளில் ஓடினார். சுவீடனின் அன்னா பெக் [ 26: 18.03] வெள்ளியையும், அவுஸ்திரேலியாவின் பைகே கிரேகோ [26: 37.54 ] வெண்கலத்தையும் பெற்றனர்.

ஷிசுவோகா ப்ரிஃபெக்சரை பூர்வீகமாகக்கொண்ட சுகியூரா தனது மறுவாழ்வின் ஒரு பகுதியாக சைக்கிள் ஓட்டுதலை தொடர்ந்தார். சுகியூராவின் உடலின் வலது பக்கத்தில் பக்கவாதம் மற்றும் 45 வயதில் சைக்கிள் பந்தயத்தில் விழுந்ததில் நினைவாற்றல் குறைபாடு ஏற்பட்டது. பராலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் பெண் ஜப்பானிய சைக்கிள் வீரர் மற்றும் ஒட்டுமொத்தமாக நான்காவது பெண்மணி.

2017 உலக சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றார். 2019 உலக சம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

# ஸிம்பாப்வேயை வீழ்த்தியது அயர்லாந்து

அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது ரி20 போட்டியில் அயர்லாந்து வெற்றி பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஸிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடியது. ஸிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களை எடுத்தது. அயர்லாந்து அணி 18.3 ஓவரில் 3 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி20 போட்டியில் 3 ஓட்ட வித்தியாசத்தில் ஸிம்பாப்வே வெற்றி பெற்றது.



ஸிம்பாப்வே அணியின் முன்னணி வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். 64 ஓட்டங்களில் 5 விக்கெட்டுகளை இழந்தனர்.

6ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மில்டன் ஷம்பா, ரியான் பர்ல் பொறுப்புடன் ஆடினர். இந்த ஜோடி 88 ஓட்டங்கள் சேர்த்தது. ஷம்பா 46 ஓட்டங்களுடனும், பர்ல் 37 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்தது.

153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பால் ஸ்டிரிங் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் கெவின் ஓ பிரையன் சிறப்பாக ஆடி அரைசதமடித்தார். அவர் 60 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து இறங்கிய ஜார்ஜ் டாக்ரெல் பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். அவர் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்கள் அடித்தார்.

அயர்லாந்து அணி 18.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருது கெவின் ஓ பிரையனுக்கு அளிக்கப்பட்டது.

# அமைச்சரவை தீர்மானங்கள்

## 2021.08.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் கம்போடியா இராச்சியத்திற்கும் இடையிலான இராஜதந்திர கடமைகள் மற்றும் சேவைகள் தொடர்பான உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு வீசா அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் கம்போடியா இராச்சியத்திற்கும் இடையிலான இராஜதந்திர கடமைகள் மற்றும் சேவைகள் தொடர்பான உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு வீசா அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக இருதரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கான ஒப்பந்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும், வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. விதவைகள், தபுதாரர் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக மேலதிக நிதி ஒதுக்கீடு வழங்கல்**

அரச ஊழியர்களின் ஓய்வூதிய நன்மைகளுக்காக 2021 ஆம் ஆண்டில் 300,000 மில்லியன் ரூபா திறைசேரி செலுத்தவுள்ளதுடன், அதன்கீழ் விதவைகள், தபுதாரர் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக மாத்திரம் 35,500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதில் 2021 ஜூன் மாதம் 30 ஆம் திகதியளவில் 26,367 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதுடன், ஆண்டின் தொடர்ந்து வரும் காலப்பகுதிக்காக 19,000 மில்லியன் ரூபா மேலதிக நிதி அவசியமாகவுள்ளது.

விதவைகள், தபுதாரர் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்குத் தேவையான நிதி விசேட சட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் ஒதுக்கப்படுவதுடன், அரசியலமைப்பின் 150 ஆவது பிரிவின் (2) ஆவது உப அரசியலமைப்பின் மூலம் நிதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிதி அமைச்சரால் கையொப்பமிடப்பட்ட விசேட சட்ட அதிகார அனுமதிப்பத்திரத்தின் (குறைநிரப்பு) மூலம் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் 19,000 மில்லியன் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

**03. இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்குமிடையே கப்பல் தொழில் வல்லுனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழை அங்கீகரித்தல் (Certificate of Recognition) தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல்**

வெளிநாடொன்றில் ஏதேனுமொரு சமுத்திரவியல் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட கப்பலோட்டி ஒருவர், ஏதேனுமொரு வேறு அரசாங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பலில் தொழில் புரிவதற்காக, குறித்த கப்பல் பதிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்தால் அதற்குச் சமாந்தரமான சான்றிதழை (Certificate of Recognition) பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். வர்த்தக கப்பல்கள் போக்குவரத்து செயலகம் தற்போது 33 நாடுகளுடன் அவ்வாறான சான்றிதழ்களை அங்கீகரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், அதன் மூலம் இலங்கையைச் சார்ந்த அதிகமான கப்பலோட்டிகளுக்கு வெளிநாட்டுக் கப்பல்களில் தொழில் புரிவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இலங்கை 2007 ஆம் ஆண்டு அவ்வாறான சான்றிதழ்களை அங்கீகரிப்பதற்காக ஐக்கிய இராச்சியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளதுடன், இலங்கையைச் சார்ந்த கப்பல் தொழில் வல்லுனர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் குறித்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைத் திருத்தம் செய்து புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இருதரப்பினருக்கிடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்காக புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**04. நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் இறங்கு துறைக்கு கப்பல்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவதற்கான தானியங்கி படகுச்சேவை வழங்குநர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**

2021/2022 மற்றும் 2022/2023 காலப்பகுதியில் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் இறங்கு துறைக்கு நிலக்கரி படகு மூலம் போக்குவரத்து செய்வதற்குப் பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, குறித்த சேவை வழங்கலுக்கான ஒப்பந்தத்தை M/s Shreeji Shipping Limited இற்கு வழங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தம் செய்தல்**

இந்தியாவில் பணிபுரியும் இலங்கையர்கள், இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு நிதியப் பங்களிப்புத் தேவைகளிலிருந்து விடுபடுவதற்கும், இலங்கையில் பணிபுரியும் இந்தியர்கள் எமது நாட்டிலுள்ள ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தேவையிலிருந்து விடுவிக்கும் நோக்கில் இரு நாடுகளுக்கிடையே இருதரப்பு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக 2018 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காக தற்போது நடைமுறையிலுள்ள அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் கீழுள்ள நன்மைகளை மேலும் அதிகரித்தல்**

2016 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்குப் பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் தமது 70 வயது வரை தற்போது நடைமுறையிலுள்ள அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த தினத்திற்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளவர்களுக்காக குறித்த நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமான வகையில் அக்ரஹார காப்புறுதி திட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2020 ஜூலை மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ள பிரதிபலன்களை மேலும் அதிகரித்து ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் அனைவருக்கும் ஏற்புடைய வகையில் அக்ரஹார காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபசெயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்**

அதிபர், ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் தொடர்பாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப செயற்குழு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் 33 தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு கீழ்வரும் தீர்மானங்களை எட்டியுள்ளது.

அமைச்சரவை உபசெயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கொள்கை ரீதியாக அங்கீகரித்தல்

ஆசிரியர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் அதிபர் சேவைகள் போன்றவற்றை வரைவிட்ட சேவையாக 2021 நவம்பர் மாதம் 20 திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடல்

அமைச்சரவை உப செயற்குழு மூலம் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக பரிந்துரைக்கப்பட்ட சம்பளத் திருத்தங்கள், 2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

2021 செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் தமது கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு 5ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு செலுத்துதல்

உப செயற்குழுவின் இதர யோசனைகள் மாகாண சபைகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து கல்வி அமைச்சின் மூலம் 06 மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**08. காலநிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தணிக்கும் பன்முகப் படிமுறைகள் வேலைத்திட்டம்**

காலநிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் பன்முகப் படிமுறைகள் வேலைத்திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விடயத்தலைப்புக்கமைய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 மே மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 03 படிமுறைகளின் கீழ் 434 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்த மதிப்பீட்டு செலவில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டத்திற்கான 92 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கியின் கூட்டு மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியுடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. ஏற்றுமதிக்காக கற்றாழை தாவர ஔடத உற்பத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட அவுரா லங்கா ஹர்பல்ஸ் தனியார் கம்பனிக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் காணி வழங்கல்**

வரையறுக்கப்பட்ட அவுரா லங்கா ஹர்பல்ஸ் தனியார் கம்பனி அநுராதபுர மாவட்டத்தில் சேதன செய்கை முறையின் கீழ் ஏற்றுமதிக்கான கற்றாழை தாவர ஔடத உற்பத்தி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக உலர் வலய கிராமிய பொருளாதார அபிவிருத்தி கற்றாழைக் கருத்திட்டம் எனும் பெயரிலான கருத்திட்ட யோசனையை சமர்ப்பித்துள்ளது. குறித்த கருத்திட்டத்தில் கற்றாழை தாவரத்தின் வேர், கிழங்கு, திண்மக்கூழ் மற்றும் இலையின் வெளிப்பகுதிகளைப் பயன்படுத்தி அதிக சக்தி கொண்ட பானங்கள், ஔடத மாத்திரைகள், தைலங்கள், உறிஞ்சும் குளிகைகள் (Inhaler) மற்றும் தலைப்பூச்சு எண்ணெய் வகைகள் போன்ற உற்பத்திகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு 783 மில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன், ஆரம்ப கட்டமாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர் திட்டமிட்டுள்ளார். இக்கருத்திட்டத்தின் கீழ் இராஜாங்கனை மற்றும் நொச்சியாகம பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 2000 ஏக்கர்களில் கற்றாழை விதைக் கன்றுகள் உற்பத்திக்கான நாற்று மேடைகளை உருவாக்குவதற்கும், குறித்த நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படும் கன்றுகளைப் பயன்படுத்தி கற்றாழைச் செய்கையை மேற்கொள்வதற்காக அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள 102,000 ஏக்கர்களைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்காக வழங்கல் பத்திரம் மற்றும் அனுமதிப் பத்திரத்தின் மூலம் காணி உரிமை கொண்ட குடும்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கைக்காக அரச காணிகளைப் பயன்படுத்துகின்றவர்களையும் இணைத்துக்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் தொழிற்சாலை மற்றும் நடவடிக்கைகள் அலுவலக வளாகத்தை நிர்மாணித்து மேற்கொண்டு செல்வதற்கும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளுக்காக 66 ஏக்கர்கள் வரையான காணியை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 30 வருட நீண்டகால குத்தகை அடிப்படையில் கம்பனிக்கு வழங்குவதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. கொவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சுதேச ஔடதங்களை மக்களுக்கு வழங்கும் கருத்திட்டம்**

தற்போது நாடளாவிய ரீதியில் பரவி வரும் கொவிட் - 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் உள்ளடக்கியதாக சுதேச நோய் எதிர்ப்பு சக்தி ஔடதங்கள் மற்றும் நோய் எதிர்ப்பு ஊக்கி மூலிகைக் கஞ்சி வழங்குவதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆயுர்வேத திணைக்களத்தின் வேதியல் சூத்திரக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மூலிகைப் பேழையொன்றை நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்குவதற்காக, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கும் காலப்பகுதியில் வருமானம் இழந்த 25 இலட்சம் குடும்பங்களுக்கும், இரண்டாம் கட்டமாக ஏனைய அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்குவதற்காகவும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

**11. தனியார் துறையின் முதலீட்டின் கீழ் மீள்பிறப்பாக்க எரிசக்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கரிசனை வெளிப்பாட்டுக் கருத்திட்ட(Expression interest EOT) கோரல்**

2030 ஆம் ஆண்டாகும் போது எமது நாட்டு மின்சாரத் தேவையின் 70சதவீதமானவை மீள்பிறப்பாக்க எரிசக்தி வளங்கள் மூலம் பூர்த்தி செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது. தற்போது எமது நாட்டின் நீர் மின் உற்பத்தி உச்சக்கட்டத்தை எட்டியுள்ளதால், அதற்காக சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைவதற்காக தற்போது நிறுவப்பட்டுள்ள 458 மெகாவாற்று சூரியசக்தி மின் உற்பத்தி இயலளவை மேலும் 4800 மெகாவாற்றாகவும், தற்போது நிறுவப்பட்டுள்ள 248 மெகாவாற்று காற்றாலை மின் உற்பத்தி இயலளவை மேலும் 3500 மெகாவாற்றாக அதிகரிக்க வேண்டியும் உள்ளது. அதேபோல், அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை தேசிய மின்வலுக் கட்டமைப்புக்கு இயலுமான வகையில் தேசிய மின்வலுக் கட்டமைப்பை நவீனமயப்படுத்த வேண்டியுள்ளது.

அதற்கமைய, அடையாளங் காணப்படும் 50 மெகாவாற்றுக்கு அதிகமான கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி குறித்த கருத்திட்டங்களுக்கான நிதியிடலில் ஆர்வம் காட்டும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக கரிசனை வெளிப்பாட்டு முன்மொழிவுத் திட்டங்களை பெற்றுக் கொள்வதற்காக மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

# எதிர்க்கட்சியால் மாத்தளை வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணம் கையளிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெ ழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்படும் "ஜன சுவய" கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூக நலத்திட்டத்தின் 23 ஆவது கட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்பிரகாரம் 47 இலட்சத்து ஐம்ப தாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த (ICU Ventilator 01) அத்தியாவசிய மருத்துவ உபகரணம் ஒன்று மாத்தளை மாவட்ட பிரதான வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அமல் ஹேமந்த ஜயதிலக்கவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, முன்னாள் அமைச்சர் ரஞ்சித் அலுவிகார, முன்னாள் அமைச்சர் வசந்த அலுவிகார, தம்புள்ள தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி பிரதான அமைப்பாளர் தயா நந்தசிறி, துணை அமைப்பாளர் மங்கள பிரியசாந்த ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



